விலை ரூபா: 15.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2039 புரட்டாதி 20 திங்கட்கிழமை (06.10.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 292




## வன்னி யுத்தகளம் தீவிரமடைகிறது

### இக்பால் அத்தாஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

கிளிநொச்சியைக் கைப்பற்றும் நடவடிக்கைகளை முன்னெடுக்கும்போது எதிர்வரும் நாட்கள் கடந்த இரண்டரை தசாப்த ஈழப்போரில் முக்கிய கட்டங்களை எதிர்பார்க்க முடியும் என போரியல் பத்தி எழுத்தாளர் இக்பால் அத்தாஸ் குறிப்பிட்டுள்ளார்.

கொக்காவில் நகரில் இருந்து அக்கராயனைக் கைப்பற்றும் நடவடிக்கையின்போது படைத்தரப்பிற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையில் தீவிர மோதல் இடம்பெற்றுள்ளன.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பிலுள்ள கிழக்கு மக்கள் தம்மைப் பதிவு செய்து கொண்டனர்

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த, 4 ஆயிரத்து 308 தமிழர்கள் நேற்றுக் கொழும்பில் தம்மை பதிவு செய்து கொண்டனர்.

கிழக்கு மாகாணத்தில் இருந்து வந்து மேல் மாகாணத்தில் தற்காலிகமாக தங்கியுள்ளவர்கள் தங்களை பதிவு செய்து கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ள நிலையில் நேற்று பதிவுகள் இடம் பெற்றன.

சிங்கள, முஸ்லிம் மக்கள் பதிவினை மேற்கொள்ள முன்வரவில்லை என்று கூறப்படுவது உண்மையில்லை. எல்லாப் பிரிவினரும் முன்வந்திருந்தார்கள். சிங்கள, முஸ்லிம்களுக்கிடையில் பெரியளவில் மக்கள் வந்து பதிவு செய்துகொள்ளவில்லை என்பது உண்மை தான். தமிழ் மக்கள் அளவுக்கு அவர்கள் வந்து பதிவு

(12 ஆம் பக்கம் பார்க்க)

# ஈழத்தமிழருக்கு உதவக்கோரி இந்தியப் பிரதமருக்கு 'தந்தி'

## இலட்சக் கணக்கில் அனுப்பி வைப்பு

(சென்னை)

'இலங்கையில் தமிழர்கள் இனப் படுகொலை செய்யப்படுவதை உடனடியாக தடுத்து நிறுத்த பிரதமர் தலையிடவேண்டும்' என்ற வாசகம் அடங்கிய தந்திகள் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு தமிழக மக்களினால் இலட்சக்கணக்கில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. தமிழக முதல்வர் மு.கருணாநிதியின் வேண்டுகோளையடுத்தே இத் தந்திகள் நேற்று அவசர அவசரமாக அனுப்பி வைக்கப்பட்டன.

(12 ஆம் பக்கம் பார்க்க)



விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர்களான லெப்.கேணல் குமரப்பா, லெப்.கேணல் புலேந்திரன் உட்பட்ட 12 பேரின் 21 ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வு நேற்று நடைபெற்றது. இதில் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்துவதைப் படத்தில் காணலாம்.

## பொறிவெடித் தாக்குதலில் ஒருவர் பலி; இருவர் காயம்

அம்பாறை கஞ்சிக்குடிச்சாறு வனப் பகுதியில் சிறப்பு அதிரடிப்படையினர் மீது நடத்தப்பட்ட பொறிவெடித் தாக்குதலில் அதிரடிப்படையைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். இருவர் காயமடைந்துள்ளனர்.

கஞ்சிக்குடிச்சாறு வனப்பகுதியில் நேற்று தேடுதல் நடவடிக்கையில் சிறப்பு அதிரடிப் படையினர் ஈடுபட்டனர். இவர்கள் மீது பிற்பகல் 2.50 மணியளவில் விடுதலைப் புலிகள் பொறிவெடித் தாக்குதலை நடத்தினர். இதில் அதிரடிப்படையைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டார் இருவர் காயமடைந்தனர் என புலிகள் தெரிவித்துள்ளனர். (ச-5)

## ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக சென்னையில் ஆர்ப்பாட்டம்

(சென்னை)

இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவு தெரிவித்து சென்னையிலுள்ள இலங்கை உயர் ஸ்தானிகராலயத்திற்கு முன்னால் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 10 ஆம் திகதி இந்த ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்படவுள்ளதாக கட்சியின் பொதுச் செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.

இதற்காக ஒத்துழைப்பு வழங்கும்படி அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொது செயலாளர் ஜெயலலிதா ஜெயராமுக்கு வைகோவினால் கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இந்தப் போராட்டத்திற்கு ஜெயலலிதா ஜெயராம் ஆதரவினை வெளியிட்டுள்ளதாக இந்திய இணையத்தளமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. (ச-5)

## தரைப்படைக் கொடியுடன் ஆசி பெற்ற இராணுவத் தளபதி

(கொழும்பு)

கிளிநொச்சியில் சண்டை வெகு தீவிரமாக இருக்கும் இந்த நேரத்தில் இராணுவத்தளபதி சரத்பொன்சேகா, பௌத்தர்களின் புனித நகரமான அனுராதபுரத்துக்கு சென்று இலங்கை தரைப்படையின் கொடியை பௌத்த ஆலயத்தில் வைத்து ஆசிபெற்றுச் சென்றிருக்கின்றார்.

தாங்கள் எடுத்த காரியத்தில் வெற்றி அடைய, புனித நகரமான அனுராதபுரம் பௌத்த ஆலயத்தில் வைத்து கொடி ஆசிர்வதிக்கப்பட வேண்டும் என்று அவர் விரும்புகிறார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சுப் பொறுப்புக்களில் திடீர் மாற்றம்?

முக்கிய அமைச்சுப் பொறுப்புக்களில் மாற்றங்கள் கொண்டுவரப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

எதிர்வரும் தினங்களில் முக்கிய அமைச்சுப் பொறுப்புக்களில் மாற்றங்கள் கொண்டுவரப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஊடகம், போக்குவரத்து போன்ற அமைச்சுக்களில் மாற்றங்கள் ஏற்படவுள்ளதாக அறியவருகிறது. போக்குவரத்து அமைச்சர் டலஸ் அழகப்பெரும ஊடக அமைச்சராக நியமிக்கப்படக் கூடும் என லக்பிம நாளேடு செய்தி வெளியிட்டுள்ளது. (ச)

## இலங்கை சிங்கள மக்களுக்கு மட்டும் சொந்தமான நாடல்ல

### ஜனாதிபதியின் ஆலோசகர் அஸ்வர்

(கொழும்பு)

இலங்கை சிங்கள மக்களுக்கு மட்டுமே சொந்தமான நாடல்ல. இங்கு வாழும் தமிழ், முஸ்லிம் மலாயர், பறங்கியர் அனைவருக்கும் சொந்தமான நாடாகும்.

இன ரீதியாக சிந்திக்காது இலங்கையர்கள் என நாம் சிந்திக்க வேண்டும். கிளிநொச்சி மீதான படையினரின் மனிதாபிமான நடவடிக்கைகளுக்கு உலக நாடுகள் ஆதரவளிக்கின்றன என்று ஜனாதிபதியின் ஆலோசகர் ஏ.எச்.எம்.அஸ்வர் தெரிவித்தார்.

கொழும்பு மாளிகாவத்தையிலுள்ள இலங்கை இஸ்லாமிய மத்திய நிலையத்தில் இடம்பெற்ற குறைந்த வருமானம் பெறும் பல்கலைக்கழக மாணவர்களுக்கு புலமைப் பரிசில் வழங்கும் நிகழ்ச்சி நேற்று ஞாயிற்றுக்கிழமை

(12 ஆம் பக்கம் பார்க்க)

# விடுதலைப்புலிகளின் கட்டளை பீடத்தை வான் தாக்குதலால் அழிக்க முடியாது

**விடுதலைப்புலிகளின் முக்கிய அலுவலகங்கள் மீது விமானப் படையினர் அண்மைக் காலமாகத் தாக்குதல் மேற்கொள்வது குறித்துக் கொழும்பிலிருந்து வெளிவரும் லக்பிம ஆங்கில நாளேடு தனது பாதுகாப்புப் பத்தியில் தெரிவித்துள்ளதன் முக்கிய பகுதிகள் எமது வாசகர்களுக்காக இங்கு தரப்படுகின்றது.**

வான் தாக்குதலில் மேலோங்குவதன் மூலம் எதிர்த் தரப்பின் கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையங்களை சிதைத்து விட முடியும் என்பது படைத்துறை வல்லுநர்களின் கருத்து.

ஆனால் விடுதலைப்புலிகளின் உட்கட்டுமானங்கள் வெளியில் தெரிவதில்லை. எனவே இது அவர்களுக்குப் பொருந்தப் போவதில்லை. வான் தாக்குதலில் மேலோங்குவதன் மூலம் எதிர்த் தரப்பின் கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையங்களைச் சிதைத்து விட முடியும் என்பது வான் தாக்குதல் கொள்கை வகுப்பாளர்களான கேணல் ஜோன் பெய்போன் மற்றும் கேணல் ஜோன் வார்டன் ஆகியோரின் கருத்து.

கட்டளை மையங்களைச் செயலிழக்கச் செய்வது உளவியல் தாக்கங்களை ஏற்படுத்துவதுடன் தொடர்புடையது என்பது பெய்போன் கருத்து. எதிர்த்தரப்பின் மையப் புள்ளியைத் தகர்ப்பதன் மூலம் எதிர்த் தரப்பை முறியடிக்க முடியும்.

ஆனால் இந்தக் கொள்கைகளை முறியடிப்பது விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் கைதேர்ந்தவர். இவர்களின் கொள்கைகள் முன்னைய ஈழப் போர்களில் பயனற்றதாகவே இருந்தன.

அதற்கான காரணம் விடுதலைப்புலிகளின் உட்கட்டுமானங்கள் வெளியில் தெரிவதில்லை. அவர்களின் கொள்கைகள் இரு நாடுகளுக்கிடையிலான போரின்போதே செயற்றிறன் மிக்கது. கெரில்லாப் போரில் பயன்படப் போவதில்லை.

போர் நிறுத்தம் 2002 ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்ட போது வன்னியில் உட்கட்டுமான அமைப்புக்கள் எதுவும் இருக்கவில்லை. ஆனால் போர்நிறுத்த உடன்பாடு கைச்சாத்திடப்பட்ட பின்னர் பொருளாதாரச் செயற்பாடுகள் வன்னியில் அதிகரித்திருந்தன.

ஒரு நாட்டுக்குரிய உட்கட்டுமான அமைப்புகளை விடுதலைப்புலிகள் நிறுவியிருந்தனர். அவற்றில் சில சமாதான நடவடிக்கைகளுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டிருந்தன.

முன்னர் நடைபெற்ற ஈழப் போர்களில் வான் தாக்குதல்களிலிருந்து தமது படையணிகளை விடுதலைப்புலிகள் விலக்கியே வைத்திருந்தனர். பாரிய படை நடவடிக்கைகளின்போது விடுதலைப்புலிகள் தமது படையணிகளின் செறிவாக்கத்தை மிகவும் அவதானமாகவே பேணிவந்திருந்தனர். அவர்களின் கட்டளைமையங்கள் வெளியில் தெரிவதில்லை.

**விமானத் தாக்குதல்**

வான் படையினரின் பிரதான நடவடிக்கை படையினருக்கான ஆதரவுத் தாக்குதலை வழங்குவதாகவே அமைந்திருந்தது. ஆனால் தற்போது விடுதலைப்புலிகள் தமது கட்டளை மையங்களை அமைத்தபோது படையினர் அதனை உன்னிப்பாக அவதானித்து வந்தனர்.

அவற்றைத் தாக்குதவதற்குத் தேவையான அமைவுப் புள்ளிகளை வான் படையினர் கைவசம் வைத்திருந்தனர். அதன் அடிப்படையிலேயே கடந்த புதன்கிழமை (01.10.2008) வான் படையின் மிக் 27 மற்றும் கிபீர் ரக விமானங்கள் வன்னிப் பகுதியில் தாக்குதலை நடத்தியிருந்தன.

விடுதலைப்புலிகளின் அரசியல் தலைமையகத்தைத் தாக்கும்படி அரசு கடந்த வாரம் வான் படையினருக்கு உத்தரவுகளை வழங்கியிருந்தது. ஆனால் தாக்குதல் நடைபெற்றபோது அந்த அலுவலகத்தில் யாரும் இருக்கவில்லை.

விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் கூட அங்கு வருவது குறைவு. அலுவலகங்களைத் தவிர்க்குமாறு விடுதலைப்புலிகளின் தலைமை அதன் தலைவர்களைப் பணித்திருந்தது.

வான் படையினர் தாக்குதல்களை அதிகரித்ததிலிருந்து விடுதலைப்புலிகளின்அரசியல்துறை மற்றும் நிர்வாக அலுவலகங்கள் வெறிச்சோடியே காணப்பட்டன.வான் படையினரின் தாக்குதலில் விடுதலைப்புலிகளின் கட்டளை மையங்கள் செயலிழந்து விட்டது எனக் கொள்ள முடியாது.

வன்னித் தகவல்களின்படி விடுதலைப் புலிகள் தமது கட்டளை மையங்களை ஏற்கனவே இடமாற்றி விட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

**தாக்குதல்கள் அதிகரிக்கலாம்**

இதனிடையே கிளிநொச்சி மீதான தாக்குதலுக்கு 57-வது படையணியினர் தயாராகி வருவதாகப் படைத் தரப்புத் தெரிவித்துள்ளது. இராணுவத்தின் 4-வது சிங்க ரெஜிமென்ட், 3-வது, 4-வது கஜபா மற்றும் 8-வது சிலோன் இலகு காலாட் படை போன்றவை அக்கராயனில் இருந்து நகர முற்பட்டு வருகின்றன.

கிளிநொச்சியைச் சூழ விடுதலைப்புலிகள் மண் அணைகளை அமைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. எனவே இராணுவம் கடுமையாக எதிர்த் தாக்குதல்களை எதிர்கொள்ள நேரிடலாம்.

57-வது படையணியுடன் மேலும் ஒரு பிரிகேட் இணைக்கப்பட்டுள்ளதுடன் இராணுவத்தில் மேலும் ஒரு படையணியை உருவாக்குவதற்குப் பாதுகாப்பு அமைச்சு அனுமதி அளித்துள்ளது.

இந்த படையணி தற்போதைய ஈழப் போரில் உருவாக்கப்படும் 6-வது படையணியாகும். எனினும் 57-வது படையணியே மிகவும் சிறந்த தாக்குதல் படையணியாக உருவாக்கப்பட்டுள்ளது.

4-வது பிரிகேட்டின் இணைப்புடன் இந்தப் படையணியிலுள்ள படையினரின் எண்ணிக்கை 10 ஆயிரமாக உயர்வடைந்துள்ளது. (ச-5)

# முன்பள்ளி ஆசிரியர் தின விழா

வலி. மேற்கு சனசமூக நிலையங்களின் சமாசம் நடாத்தும் முன்பள்ளி ஆசிரியர் தின விழா இன்று திங்கட்கிழமை ஒரு மணிக்கு அராலி தெற்கு கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் வலி. மேற்கு சனசமூக நிலைய சமாசத் தலைவர் பொன். காங்கேயநாதன் தலைமையில் நடைபெறும்.

நிகழ்வில் பிரதம விருந்தினராக சுழிபுரம் வலி.மேற்கு பிரதேச சபை செயலாளர் சு.புத்திசிகாமணி கலந்து கொள்கிறார்.

சிறப்பு விருந்தினர்களாக தேசிய இளைஞர் சேவைகள் மன்ற உதவி திட்ட இயக்குநர் தி.சிவதெட்சணாமூர்த்தியும் கௌரவ விருந்தினர்களாக போரூட் மாவட்ட உதவித்திட்ட முகாமையாளர் தெ.பாலசுப்பிரமணியம், சாவகச்சேரி செலிங்கோ காப்புறுதி நிறுவன முகாமையாளர் வி.சுதர்சன், யாழ்ப்பாணம் செலிங்கோ காப்புறுதி நிறுவன முகாமையாளர் பா. நந்தகுமார், உதவிக் கல்விப் பணிப்பாளர் குகனேசன், சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் ஞானவேல்ராஜா, அராலி பிரதேச உப அலுவலகப் பொறுப்பதிகாரி செல்வி நாகேஸ்வரி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ச-3)

பாடசாலைகளுக்கிடையிலான இருபது-20 போட்டியில்

# கொக்குவில் இந்துவின் வெற்றி ஆசிரியர் தினத்திற்கு கிடைத்த பரிசு

## அதிபர் அகிலதாஸ் புகழாரம்

(வட்டுக்கோட்டை)

பாடசாலைகளுக்கிடையிலான இருபது-20 துடுப்பாட்டப் போட்டியில் கொக்குவில் இந்துக்கல்லூரி சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளமை ஆசிரியர் தினத்துக்கு எமக்கும் கிடைத்த பரிசு என கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் அ.அகிலதாஸ் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணக்கல்லூரி விளையாட்டுத் துறையினரால் நடாத்தப்பட்ட இருபது-20 துடுப்பாட்டப் போட்டியின் இறுதிப் போட்டி நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது,

இலங்கையில் முதன்முறையாக பாடசாலைகளுக்கிடையே நடாத்தப்பட்ட இவ் இருபது-20 துடுப்பாட்ட சுற்றுப்போட்டியில் கொக்குவில் இந்துக்கல்லூரி சம்பியனாக தெரிவு செய்யப்பட்டமை கல்லூரி வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியது.

எமது பிள்ளைகள் ஆசிரியர் தினப் பரிசாக இவ் வெற்றிக் கிண்ணத்தை எமக்கு அளித்துள்ளனர்.

இவ் சுற்றுப்போட்டிகள் இனி வரும் காலங்களில், இதனை முதன் முறையாக நடாத்துவதற்கு பாடுபட்ட கல்லூரி அதிபர் நோயல் விமலேந்திரனின் பெயரிலேயே நடாத்த வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

இதேவேளை எமது பிள்ளைகள் தங்கள் தங்கள் திறமைகளை வெளிக்கொணர்ந்து அதன்மூலம் பல்வேறு சாதனைகளையும் வெற்றிகளையும் பெறும்போது அவர்களை மேலும் உற்சாகமூட்டும் வகையில் எமது குடாநாட்டுச் செய்தித் தாள்களில் அவர்களின் சாதனைகளும் வெற்றிகளும் முன்னரை விட இவ்வாண்டு மிகவும் சிறப்பாக வெளிவந்து கொண்டு இருப்பது எமது மாவட்ட விளையாட்டுத்துறை வளர்ச்சிக்கு ஓர் முக்கிய திருப்பு முனையாக அமைந்து காணப்படுகின்றது என யாழ்ப்பாணக்கல்லூரி அதிபர் நோயல் விமலேந்திரன் தனது உரையில் தெரிவித்தார்.



தொடர்ந்து உரையாற்றிய யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரி உப அதிபர்,

இத்துடுப்பாட்ட சுற்றுப் போட்டியை முதன் முறையாக அறிமுகப்படுத்திய யாழ்ப்பாணக்கல்லூரி அதிபர் நோயல் விமலேந்திரனின் பெயரிலேயே நடாத்த வேண்டும் என வேண்டுகோள் விடுத்தார். (ச-27)

# ஆசிரியர் தினவிழா

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் ஆசிரியர் தினவிழா இன்று திங்கட்கிழமை. காலை 9 மணிக்கு கல்லூரி சிரேஷ்ட மாணவ முதல்வர் செல்வன் ரமேஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

விழாவுக்கு பிரதம விருந்தினராக இந்துபோர்ட் இராசரத்தினம் அவர்களின் புத்திரி திரு.திருமதி. மாணிக்கவாசகம் தம்பதிகளும் இளைப்பாறிய முன்னாள் அதிபர் திரு.க.சிவாஜியும் அவரது பாரியாரும் கலந்து கொள்வர். (ச-3)

பாராட்டி வாழ்த்துகின்றோம்



3 ஆவது தடவையாகப் பல்கலைக்கழக ஊழியர் சங்கத் தலைவராக ச.க.தனேந்திரன் அவர்கள் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டுள்ளமைக்குப் பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம். இவர் முன்னாள் துணைவேந்தர்களான பேராசிரியர் துரைராசா, பேராசிரியர் பொன்.பாலசுந்தரம்பிள்ளை ஆகியோரது காலத்தில் பல நற்பணிகளைச் செய்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் தனது பதவிக் காலத்தில் பல்கலைக்கழக அபிவிருத்திக்கும் வேலைவாய்ப்பிற்கும் முன்னுரிமை அளிப்பார் என்றும், ஊழியர்களின் பிரச்சினைக்கு துணைவேந்தருடனும், பேரவையுடனும் கதைத்து குறுகிய காலத்தில் எல்லோருடைய பிரச்சினையையும் தீர்ப்பதென்றும் திடசங்கர்ப்பம் பூண்டுள்ளார். இன்று 06.10.2008 திங்கட்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு சகல செயற்குழு உறுப்பினர்களையும் ஊழியர் பொது அறையில் சமூகம் கொடுக்கும்படியும், பிற்பகல் 3.30 மணியளவில் ஊழியர் பொது அறையில் நடைபெறும் தேநீர் விருந்துபசாரத்தில் கலந்து கொள்ளும் படியும் சகல பல்கலைக்கழக உத்தியோகத்தர்களையும் கேட்டுள்ளார்.

வாழ்த்துவோர்:- லக்ஸ்சுமி ரேடர்ஸ்
K.K.S. வீதி, கொக்குவில்.
(C-1582)

வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க
தீபாவளியை முன்னிட்டு
27.09.2008 - 27.10.2008 வரை
விசேட மலிவு விற்பனை



◎ ஆண்கள் பெண்களுக்கான அனைத்து துணி வகைகளையும் மிகக் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
◎ ரெடிமேட் ஆடைகளுக்கு அதிகூடிய கழிவு வழங்கப்படும்.
உடன் விரையுங்கள்...

வைடன் புடைவை நிலையம்
410, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P :- 021 222 2381
(C-1612)

# இன்று ஒரு தகவல்

## அன்பு

அன்பாயிருக்க வேண்டும் என்று பெரியவர்கள் சொல்வார்கள்.

அன்பில் பல வகை உண்டு. அதைச்சரியாகப் புரிந்து கொண்டு அன்பு காட்ட வேண்டும்.

அன்பென்றால் சாதாரணமாக நினைத்து விடாதீர்கள் அதில் எவ்வளவு விதம் தெரியுமா?

இரக்கம்–கருணை–காருண்யம்–பந்துத்துவம்–பட்சம்–பாசம்–நேசம்–விசுவாசம்–அபிமானம்–காதல்–பக்தி இப்படிப் பலவிதமாக அதைப்பற்றி சொல்கிறார்கள்.

இந்தவார்த்தைகளெல்லாம் நாம் கேள்விப்பட்டது தான். இருந்தாலும் அவற்றுக்கெல்லாம் என்ன வித்தியாசம் என்று கேட்டால் சரியாகச் சொல்லத் தெரியாது!

இந்த வார்த்தைக்கெல்லாம் பெரியவர்கள் என்ன விளக்கம் சொல்கிறார்கள் என்று இப்பொழுது பார்க்கலாம்.

எளியவர்கள்மேல்செலுத்தும்அன்புக்கு இரக்கம்என்று பெயர்.

அறிவு பலம்–சீர பலம் இந்த இரண்டும் இல்லாதவர்கள் மேல்–அதாவது வலிமையற்றவர்கள் மேல் செலுத்தும் அன்பு தான் கருணை.

எறும்பிலிருந்து யானைவரை சகல ஜீவராசிகளிலும் காட்டும் அன்புக்கு காருண்யம் என்று பெயர்–ஜீவ காருண்யம்! சிபிச்சக்கரவர்த்தி காட்டிய அன்பு இந்த ரகம்.

உறவினர்கள்–சொந்தக்காரர்கள் –அவர்கள் வசதியாக இருந்தாலும் வறுமையிலிருந்தாலும் வேறுபாடு இல்லாமல் காட்டும் அன்பு–பந்துத்துவம்.

ஒரு எஜமான் வேலையாட்களிடம் காட்டும் அன்புக்குப் பெயர்–பட்சம்! அவனும் தன்னை மாதிரி மனிதன்தான் என்ற நினைப்பு வேண்டும்.

ஒரு தாய் தன் குழந்தை மேல் காட்டும் அன்புக்கு பாசம் என்றபெயர்! (ஈருடல் ஓருயிர் என்று நினைப்பது இது.) ராமரும் கோசலையும் இதற்கு உதாரணம்.

தம்மையொத்த நண்பர்களிடம் செலுத்தும் அன்புக்கு நேசம் என்று பெயர். வயது–செல்வம்–அந்தஸ்து பார்க்காமல் அவர் கள் சுகதுக்கத்தில் சம பங்கு எடுத்துக் கொள்வது. கிருஷ்ணன் குசேலரிடம் காட்டியது இந்த ரகம்!

வேலை செய்பவன் முதலாளியிடம் காட்டும் அன்புக்கு "விசுவாசம்" என்று பெயர்.

தேசத்தின் மீது தாய்மொழி மீதும் செலுத்தும் அன்புக்கு அபிமானம் என்று பெயர். (தேசாபிமானம்)

ஒரு கணவர்–மனைவியின் மீது காட்டும் அன்புக்கு காதல் என்று பெயர்.

கடவுள் மீது செலுத்தும் அன்பு தான் "பக்தி".

இப்படி அன்பில் பலரகம் இருக்கும் போது அதில் உள்ள வித்தியாசம் தெரியாமல் இடம் மாற்றி அன்பு காட்டினால் அது இடைஞ்சல் தான்.

சரி... இந்த அன்பைப்பற்றி விஞ்ஞானம் என்ன சொல் கிறது தெரியுமா?

இதயத்தைப் பாதுகாப்பதற்கு முக்கியமாகத் தேவைப் படுவது இந்த அன்பு ஒன்று தான் என்று சொல்கிறது!

நெதர்லாந்து விஞ்ஞானிகள் இதை ஆராய்ச்சி செய்து கண்டு பிடித்திருக்கிறார்கள்.

முயல் குட்டிகள் சிலவற்றை தேர்ந்தெடுத்து, இரண்டு பிரிவாகப் பிரித்தார்கள்.

ஒரு பிரிவுக்கு கொழும்பு அதிகமாக உள்ள ஆகாரத்தை கொடுத்தார்கள். இன்னொரு பிரிவு முயல்களை கூண்டுகளைத் திறந்து விட்டு கொஞ்ச நேரம் கொஞ்சி விட்டு அதற்குப் பிறகு ஆகாரம் கொடுத்தார்களாம்.

இந்தப் பிரிவு முயல்களுக்கு இதய பாதிப்பு 60சதவீதம் குறைவாக இருந்ததாம்!

சில நோயாளிகளுக்கு மாரடைப்பு வந்தாலும் அதைத் தாங்கி குணமாகும் சக்தி அதிகமாக இருக்கிறது!.

இது எப்படி என்று ஆராய்ந்து பார்த்ததில்,

அவர்களெல்லாம், மனைவி தன்மீது ரொம்ப அன்பாக இருப்பதாக நினைப்பவர்களாக இருந்தார்களாம். இதய நோயாளிகள் பலரை சந்தித்து இதய நோய் ஏற்பட என்ன காரணம் என்று கேட்டதில், அவர்கள் சொன்ன பதில் மனைவி அன்பாக இல்லை என்பதுதானாம்.

அதனால் இதயத்தை பாதுகாக்க நினைப்பவர்கள் அடுத்தவர்கள் அன்பாக இருக்கும் படி பார்த்துக் கொள்ளுங்கள். அது தான் முக்கியம்.

ஒருவர் முகம் முழுவதும் பிளாஸ்டர் போட்டுக் கொண்டு கோபத்துடன் வந்தார். ஏன் இப்படி? என்று விசாரித்தேன். "எல்லாம் உங்களால் தான் சேர்" என்றார். "விவரமாகத்தான் சொல்லுங்களேன்" என்றேன்.

உங்கள் தகவலைக் கேட்டு விட்டு ஒரு பூனைக்குட்டியை அன்பாக தடவிக் கொடுப்பதற்கு கையில் எடுத்தேன். ஆனால் அது முந்திக் கொண்டு எனது முகத்தை தடவிக் கொடுத்து விட்டது. முகம் முழுவதும் நகக்கீறல்.

அது தான் இப்படி–என்றார். அன்பில் அறிவு சேராததால் வந்த கோளாறு இது.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# சிங்கள அரசுகள் ஓர் வட்டத்திலிருந்து தமிழர் பிரச்சினையை நோக்குகின்றன

## றோவின் முன்னாள் தலைவர் ஏ.கே.வர்மா

இலங்கையின் சிங்கள அரசாங்கங்கள் அனைத்துமே ஓர் வட்டத்திற்குள்தீர்வுபெற்றுக்கொடுக்க முயற்சி மேற்கொள்வதாக முன்னாள் இந்திய றோ அமைப்பின் தலைவர் ஏ.கே. வர்மா தெரிவித்துள்ளார்.

இலங்கை இனப்பிரச்சினைக்கு இராணுவ ரீதியிலான தீர்வுத் திட்டங்களை முன்னிலைப்படுத்திய நடவடிக்கைகள் நிரந்தர சமாதானத்தை எட்டுவதற்கு ஒருபோதும் வழியமைக்காதென அவர் தெரிவித்துள்ளார்.

தற்போதைய ஆளுங்கட்சி மாவட்ட ரீதியான அதிகாரப் பரவலாக்கலை முன்னிலைப்படுத்தி தீர்வுத் திட்டத்தை முன்னெடுப்பதாகவும், இதனை முழுக்க முழுக்க வெற்றிகரமான முயற்சியாக கருத முடியாதெனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இனப்பிரச்சினை தொடர்பான விடயங்களை இலங்கை அரசாங்கம் கூர்ந்து அவதானித்து தீர்வுத் திட்டங்களை முன்வைக்கவேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போதைய சர்வதேச மனித உரிமைகள் சட்ட திட்டங்களின் அடிப்படையில் கொன்று குவிக்கும் அதிகாரம் எந்தவொரு அரசாங்கத்திற்கும் இல்லை என அவர் சுட்டிக் காட்டியுள்ளார். சட்ட ரீதியான முறையில் தண்டனை வழங்கப்பட வேண்டுமே தவிர படுகொலை செய்வதற்கு எந்தவொரு நாட்டிற்கும் உரிமையில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

சாதாரண குற்றவாளிகளைப் போன்றே பயங்கரவாதிகளும் நடத்தப்பட வேண்டியதன் அவசியத்தை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும் என அவர்குறிப்பிட்டுள்ளார்.

அதிகாரப்பரவலாக்கலின் மூலம் தீர்வுத் திட்டமொன்றை பெற்றுக் கொடுப்பதற்காகவே இந்தியா இலங்கை தமிழர்களுக்கு ஆயுத பயிற்சி வழங்கியதாகவும், எனினும் இலங்கைத் தமிழர்கள் சர்வதேச ரீதியான வலையமைப்பொன்றை ஏற்றுக்கொண்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

முன்னணி ஆங்கில இணையத் தளமொன்றுக்கு அளித்த பிரத்தியேக பேட்டியொன்றின்போது அவர் இந்தக் கருத்துக்களை முன்வைத்துள்ளார். இராணுவ நடவடிக்கைகளின் மூலம் நிலப்பரப்புக்கள் கைப்பற்றிய போதிலும் இனரீதியான கிளர்ச்சி மீண்டும் வெடிக்காதென்பதற்கு உத்தரவாதமளிக்க முடியாதென ஏ.கே. வர்மா தெரிவித்துள்ளார். (அ–6)

# பெற்றோரின் தண்டனைகளை நல்வழிப்படுத்தும் கடிவாளமாக பிள்ளைகள் கருத வேண்டும்

## ஊர்காவற்றுறை மாவட்ட நீதிபதி உரை

பிள்ளைகளைப் பெற்றோர் தண்டித்தால் அதனை கடிவாளமாகக் கருதவேண்டும் என ஊர்காவற்றுறை மாவட்ட நீதிபதி திருமதி ஜோய் மகிழ் மகாதேவன் காரை உதவி அரச அதிபர் பணிமனையின் சிறுவர், முதியோர், நல்லொழுக்க தினவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போது தெரிவித்துள்ளார்.

கரைநகர் உதவி அரச அதிபர் இ.த.ஜெயசீலன் தலைமையில் காரைநகர் சைவமகாசபை மண்டபத்தில் நடாத்தப்பட்ட இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக ஊர்காவற்றுறை மாவட்ட நீதிபதி திருமதி ஜோய் மகிழ் மகாதேவன், யாழ் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமி, சிறப்பு விருந்தினர்களாக வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனத் தலைவர் க.புஸ்பராசா, கரித்தாஸ்–கியூடெக் நிறுவன இயக்குனர் வணபிதா சி.ஜி. ஜெயக்குமார் அடிகளார், யாழ்றரன் கல்லூரி அதிபர் ந.பரமசிவம், கலாநிதி தியாகராஜா மத்திய மகாவித்தியாலய பிரதிஅதிபர் யு.சிறிஸ்கந்தராஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.

பிரதம விருந்தினர் மேலும் தொடர்ந்து உரையாற்றும் போது பதினெட்டு வயதிற்குக் குறைந்த சிறுவர்களை எவரும் சித்திரவதைக்குள்ளாக்கக் கூடாது. அதனைக் கொண்டு பெற்றோர் பிள்ளைகளைத் தண்டித்தால் அதனைக் கெட்ட நோக்கத்துடன் தவறான பார்வையில் பார்க்கக்கூடாது. பெற்றோர்கள், ஆசிரியர்கள் , சிறுவர்களின் நன்மைக்காகவே தண்டிக்கின்றனர். அந்த நேரத்தில் சிறுவர்களின் கடிவாளமாகவே அதனைக் கருத வேண்டும்.

சிறுவர்களைத் துன்புறுத்தக் கூடாது என்பதைக் கொண்டு பெற்றோர்கள், ஆசிரியர்களிற் கெதிராக நீதி மன்றத்திலோ பொலிஸ் நிலையத்திலே முறையிடுமளவிற்கு செல்லக் கூடாது. அதற்காக போர்க் கொடி தூக்கக் கூடாது.

பெற்றோர்கள் எமக்கு கடிவாளமாகவிருந்து நல்வழிப்படுத்துவார்கள் என்பதனைக் கவனத்தில் கொண்டு பெற்றோர்களையும், முதியவர்களையும், ஆசிரியர்களையும் சிறுவர்கள் கனம்பண்ணி நற்பிரஜைகளாக வாழ வேண்டும்.

இதேநேரம் சிறுவர்களின் உரிமைகளை பெரியோர்கள் மதிக்க வேண்டும். எந்தக் குழந்தையும் தானாக விரும்பிப் பிறப்ப தில்லை. ஒரு ஆணும், பெண்ணும் விரும்பியதாலேயே குழந்தை பிறக்கின்றது. அவ்வாறு பிறந்த குழந்தையை தமது பெயரில் பதிய மறுப்பது கவலைக்குரிய விடயமாகும்.

கற்கும் உரிமை சிறுவர்களிற்கு உண்டென்றும் அதேநேரம் அதனை வழங்கும் கடமை பெற்றோருக்கும் உண்டு. எதிர்காலத்து சமூகத்திற்கு அத்திவாரமாக திகழும் இன்றைய சிறுவர்கள் தந்தை, தாய் பேணி, நல்லொழுக்கத்துடன் வளர்ந்து மனதினை ஒரு நிலை நிறுத்தி கல்வி கற்று இக் கிராமத்திற்கும், நாட்டிற்கும் தமது கடமைகளைச் செய்ய முன்வரல் வேண்டும்.

முதியவர்களைப் பொறுத்தளவில் இளம் சமூகத்தினரிற்கு ஒரு பெரு விருட்சமாக திகழ்கின்றனர். ஆதலால் இளம் சமூகத்தினர் அவர்களின் ஆசிகளைப் பெற்றால் வாழ்க்கையில் முன்னேற முடியும். சிலர் பெற்றோர்களைப் பராமரிக்க முடியாமல் முதியோர் இல்லங்களில் ஒப்படைக்கின்றனர். ஆனால் அங்கு எவ்வளவு வசதிகள் இருந்தும் முதியவர்கள் தமது பிள்ளைகளின் அன்பிற்கு ஏங்கும் நிலை காணப்படுகிறது.

எத்தனை பிள்ளைகளைப் பெற்றாலும் இன்று ஒரு பிள்ளையின் அரவணைப்புக் கூட இல்லையே என்று மனவேதனைப்படுகிறார்கள். தற்கால சூழ்நிலையில் பிள்ளைகள் வெளிநாடுகளில் வாழ்ந்தாலும் வருடத்தில் 10, 15 நாட்களாவது இங்கு வந்து தமது பெற்றோரைப் பார்த்து பாசத்தை பகிர்ந்தாலே அவர்களிற்குப் போதும். இதன்மூலம் அவர்கள் ஏக்கம் தணிந்து ஆசீர்வதிக்கும் நிலையேற்படும்.

பணம் என்பது ஒரு வெளிப்படையான வெறும் ஆடம்பரமேயாகும். ஆனால் அன்பு உள்ளத்தால்வருவது. ஆகவே இன்றைய சமூகத்தவர்களாகிய நாம் சிறுவர்களின் உரிமைகளை பாதுகாத்து முதியோர்களை மதித்து நற்பிரஜைகளாக வாழ வாழ்த்துகின்றேன் எனவும் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வில் சிறுவர், முதியோர், நல்லொழுக்க தின சிறப்புரையை யாழ். பல்கலைக்கழக புவியியற்றுறை பேராசிரியர் கா.குகபாலன் நிகழ்த்தினார். அத்துடன் தியாகி அறக்கொடை நிறுவன ஆதரவுடன் முதியோர்களிற்கான உதவித் திட்ட ஆரம்ப நிகழ்வும், கரித்தாஸ் கியூடெக் நிறுவன ஆதரவில் திறமையான முதன்மை மாணவர்களிற்கு பரிசில் வழங்கல், வடபிரதேச நல்லொழுக்க சம்மேளன ஆதரவில் காரைநகர் பிரதேசத்தில் நல்லொழுக் மாணவர்களிற்கான பரிசில் வழங்கும் நிகழ்வும் மாணவர்களின் கலை நிகழ்வுகளும் நடைபெற்றன. (அ–246)

# இராசி பலன்

06.10.2008
(புரட்டாதி 20, திங்கட்கிழமை)
மூலம் முன்னிரவு 11.26 மணிவரை
ஸப்தமி முன்னிரவு 11.40மணிவரை
இராகுகாலம் 7.32–9.02மணிவரை
சுபநேரம் 12.02–1.32மணிவரை
சரஸ்வதி பூஜை ஆரம்பம்

| | |
|---|---|
| மேடம் | புதியதிட்டமிடல், பிரயாணம், வீண்பயம், குடும்பக்கவலை. |
| இடபம் | திருட்பயம், ஆரோக்கியக்குறைவு காரிய தடங்கல், பொருள் விரயம் |
| மிதுனம் | முயற்சிகைகூடும், உறவினர் வருகை, சௌபாக்கியம் |
| கடகம் | தடைப்பட்ட காரியம்கைகூடும், நண்பர்கள் சந்திப்பு, தனலாபம், உடல் நலம் |
| சிங்கம் | காரிய இடையூறு, குடும்பக் கவலை, பணவிரயம், சொத்துப் பிணக்கு |
| கன்னி | தொழில் சிந்தை, வாகன சுகம், தனவிரயம், முயற்சி தாமதம் |
| துலாம் | பிரயாண நன்மை, மனோ தைரியம், காரிய நன்மை, உறவினர் உதவி |
| விருச்சிகம் | வேலைச்சுமை, போசன சுகக் குறைவு, அதிகசெலவு, விவாதம் |
| தனுசு | வெகுமானம், போசனசுகம், புதியமுயற்சி, நண்பர்கள்சந்திப்பு |
| மகரம் | மனஸ்தாபம், காரியஅலைச்சல், எதிர்பாரா,நன்மை, சுப செலவு |
| கும்பம் | பொருள் சேர்க்கை, முயற்சி கைகூடும், புகழ், தேகநலன் |
| மீனம் | செய்தொழில் விருத்தி, நண்பர்கள் உதவி, விருந்து பசாரம், கீர்த்தி |

வளவன்

## நம்மையெல்லாம் காத்திடுவாயே!

திருப்பாற் கடலினிலே
திருவுருக் கொண்ட–கோபாலா
வல்லிபுரத்தாழ்வாரே!
வாயாரப்புகழ்ந்தோம்நின்னையே
இப்பாரினில் சாந்தி சமாதானம்
இன்பமாய் மலர
கொடிய வினைகள் அகன்று
பல கோடி செல்வம் பெற்று வாழ
பாரில்லுள்ளோர் அனைவரும்
பாங்குடனே நின்பாதம் பணிந்தோம்
நித்தம் அருள்புரிந்திடுவாய்
நம்மையெல்லாம் காத்திடுவாய்.

*க.திருநீபன்–சாவகச்சேரி*

# ஒருவார காலத்துள் சான்றிதழ்கள் நடமாடும் சேவையில் உறுதி

(பருத்தித்துறை)

கரவெட்டி பிரதேச செயலகத்தில் நடாத்தப்பட்ட காலங் கடந்த பிறப்பு, இறப்பு நடமாடும் சேவையிலே 193 விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டன. இதில் காலங் கடந்த பிறப்புப் பதிவுகளுக்கு 169 விண்ணப்பங்களும்,காலங் கடந்த இறப்புப் பதிவுக்கு 14 விண்ணப்பங்களும் காலங் கடந்த திருமணப் பதிவுகளுக்கு 10 விண்ணப்பங்களும் அடங்கியிருந்தன.

இங்கு இடம்பெற்ற நடமாடும் சேவையில் 25 காலங் கடந்த பதிவுச் சான்றிதழ்கள் உடனடியாக வழங்கப்பட்டன. உதவிப் பதிவாளர் நாயகத்தினால் அனுமதிக்கப்பட்டுள்ள 128 காலங் கடந்த பதிவுகளுக்கான சான்றிதழ்கள் ஒரு வாரத்திற்குள் வழங்கப்படவுள்ளன.

போதிய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படாத காலங் கடந்த பதிவுகளுக்கான 40 விண்ணப்பங்களுக்குத் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் கரவெட்டி பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன் தெரிவித்தார். (அ-52)

## பல்கலைக்கழக பரமேஸ்வரன் ஆலயத்தில் விசேட பூசை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் நிறுவப்பட்ட தினம் ஒக்டோபர் 6 ஆம்திகதியாகும். வருடா வருடம் இந் நாளில் ஊழியர் தின விழா,பட்டமளிப்பு விழா என்பன பல்கலைக் கழகத்தின் முக்கிய நிகழ்வுகளாக இடம் பெற்று வந்துள்ளன. நாட்டுச் சூழ்நிலைகளினால் இத் தினத்தில் இடம்பெற்று வந்த நற்கருமங்கள் சில வருடங்களாக இடம் பெறாது இருக்கின்றன.

இத் துன்பத்திலிருந்து விடுபட இந்நாளில் பல்கலைக்கழக வளவில் அமைந்துள்ள பரமேஸ்வரன் ஆலயத்தில் முற்பகல் 10.30 மணிக்கு ஸ்னபன அபிஷேகமும், விஷேட பூசையும்,ஆராதனையும் இடம்பெறவுள்ளதாக யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கத் தலைவர் சு.க.தனேந்திரன் அறிவித்துள்ளார்.

இன்று பிற்பகல் 3.30 மணிக்கு பல்கலைக்கழக ஊழியர் சங்கப் பொது அறையில் தேநீர் விருந்துபசாரமும் நடைபெறுவதை முன்னிட்டு சகல பல்கலைக்கழக ஊழியர்களையும் நண்பர்களையும், கலந்து கொள்ளுமாறு ஊழியர் சங்கத் தலைவர் கேட்டுள்ளார். (அ)

## சித்த மருத்துவ கருத்தமர்வு

யாழ்.பல்கலைக்கழக 22 ஆம் திகதி மருத்துவ அணி வழங்கும் "சித்த மருத்துவத்தின் தோற்றமும் வளர்ச்சியும்" எனும் தலைப்பிலான கருத்தமர்வு நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கைதடி, சித்தமருத்துவத் துறை கேட்போர்கூடத்தில் நடைபெறவுள்ளது.

இக் கருத்தமர்வில் மதிப்பீட்டுரையை பேராசிரியர் எஸ்.சிவலிங்கராசா நிகழ்த்துவார். (அ-6)

## விண்ணப்பம் கோரல்

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தில் தேவஸ்தான எழுதுவினைஞர், களஞ்சியப்பொறுப்பாளர் ஆகிய பதவிகளுக்கும், நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணி மண்டப நிர்வாக அலுவலர் பதவிக்கும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. மேற்படி விண்ணப்பதாரிகள் தமது சுயவிபரங்களுடன் சமயப்பெரியார்கள், கிராம அலுவலர் போன்றவர்களின் நற்சான்றுடன் இம்மாதம் 10ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தான தலைவர் கேட்டுள்ளார். (அ)

## வளர்ப்பு நாய்களுக்கான விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட அரியாலை பிரதேச வளர்ப்பு நாய்களுக்கான விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி (A.R.V) இன்று திங்கட்கிழமை காலை 9 மணி முதல் 12 மணிவரை கண்டி வீதி Y.M.C.A வளாகத்திலும், பிற்பகல் 2 மணிமுதல் 3.30 மணிவரை முள்ளிவீதி அம்மன் கோவிலடியிலும் வைத்து ஏற்றப்படவுள்ளது.

இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தங்களது வளர்ப்பு நாய்களுக்கு இத் தடுப்பூசியினை ஏற்றிக்கொள்ளுமாறு யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ம.மரியதாசன் கேட்டுக் கொண்டுள்ளார். (அ)

## சர்வதேச மனித உரிமைகள் பிரகடனம்

சர்வதேச மனித உரிமைகள் தினத்தையும், அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனத்தின் 60 ஆம் ஆண்டு நிறைவினையும் முன்னிட்டு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு பொதுமக்களுக்கு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் வகையில் வினா போட்டி ஒன்றினை நடத்தி பெறுமதி மிக்க பரிசில்களை வழங்க உத்தேசித்துள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய இணைப்பாளர் ச.சிவராஜசிங்கம் அறிவித்துள்ளார். அதனையொட்டி மனித உரிமைகள் பிரகடத்தின் சரத்துக்கள் இன்றுமுதல் 30 ஆம் திகதி வரை வலம்புரியில் பிரசுரமாகிறது.

**உறுப்புரை 1**

மனிதப்பிறவியினர் சகலரும் சுதந்திரமாகவே பிறக்கின்றனர். அவர்கள் மதிப்பிலும் உரிமைகளிலும் சமனானவர்கள்.

**உறுப்புரை 2**

இனம்,நிறம்,பால்,மொழி,மதம்,அரசியல் அல்லது வேறு அபிப்பிராயமுடைமை போன்ற எத்தகைய வேறுபாடுமின்றி எல்லா உரிமைகளுக்கும் சுதந்திரங்களும் எல்லோரும் உரித்துடையவர்களாவர்.

**உறுப்புரை 3**

வாழ்வதற்கும் சுதந்திரத்திற்கும் பாதுகாப்பிற்கும் சகலரும் உரிமையுடையோராவர்.

**உறுப்புரை 4**

எவரும் அடிமையாக வைத்திருக்கப்படுதலோ அல்லது அடிமைப்பட்ட நிலையில் வைத்திருக்கப்படுதலோ ஆகாது.

**உறுப்புரை 5**

எவரும் சித்திரவதைக்கோ அல்லது கொடுமையான மனிதத் தன்மையற்ற அல்லது இழிவான நடைமுறைக்கோ தண்டனைக்கோ உட்படுத்தப்படலாகாது.

**உறுப்புரை 6**

ஒவ்வொருவரும் எவ்விடத்திலும் சட்டத்தின் முன் ஓர் ஆளாக ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு உரிமையுடையராவர். (அ)

## அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கு சீருடை

அல்வாய் சாமணந்தறை ஆலடி விநாயகராலய அறநெறிப் பாடசாலை மாணவ, மாணவிகள் 98 பேருக்கு இந்து கலாசார அமைச்சு சீருடைகளை வழங்கியுள்ளது. ஆலய பரிபாலன சபையால் பொறுப்பேற்கப்பட்ட இச் சீருடைகள் ஆலய பரிபாலன சபைத் தலைவர் எம். அனந்தராசன் தலைமையில் அறநெறிப் பாடசாலை மாணவ, மாணவிகளுக்கு வழங்கப்பட்டன. (அ-52)

## பரிசளிப்பு வைபவமும் வாணி விழாவும்

நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்தில் நவராத்திரி காலப் போட்டிகளின் பரிசளிப்பு வைபவமும் வாணிவிழாவும் எதிர் வரும் புதன்கிழமை பாடசாலை பிரார்த்தனை மண்டபத்தில் சிறப்பாக நிகழ்த்த திட்டமிடப் பட்டுள்ளது.

இவ் வைபவத்தின் முதன்மை விருந்தினராக "முத்தமிழரசி செல்வி புஷ்பா செல்வநாயகம்". சிறப்பு விருந்தினராக யாழ். இந்துக் கல்லூரி முன்னாள் ஆசிரியர் திரு மு.பா. முத்துக்குமாருவும் கலந்து கொள்கின்றனர்.

இந்துமாமன்றப் பொறுப்பாசிரியர் திருமதி சு.சண்முகலிங்கம் தலைமையில் நிகழும் இவ் விழாவில் கோட்டமட்ட வலயமட்டப் போட்டிகளில் பங்கேற்ற நாடகங்கள், வில்லிசை, கவியரங்கு, நடனாஞ்சலி ஆகியனவும் இடபெறவுள்ளன. (அ)

## O+ இரத்தம் அவசரம் தேவை

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலை இரத்த வங்கியில் ஓ பொசிட்டிவ் ( O+ ) வகை இரத்தம் தேவைப்படுவதால் ஓ பொசிட்டிவ் இரத்த வகை உள்ளவர்கள் இரத்த வங்கிக்கு வருகை தந்து இரத்ததானம் செய்து உதவும் படி இரத்தவங்கிப் பொறுப்பாளர் டாக்டர் இ.சிவசங்கர் கேட்டுள்ளார். (அ)

## கலைஞர் கௌரவிப்புவிழா

கொழும்புத்துறை றொசாறியன் ச.ச.நிலையத்தின் ஏற்பாட்டில் செபமாலை அன்னை ஆலய வருடாந்த திருவிழாவை முன்னிட்டு கலைஞர் கௌரவிப்பு விழா இன்று திங்கட்கிழமை மாலை 5.45 மணிக்கு ஆலய வளாகத்தில் சனசமூக நிலையத் தலைவர் ஜோ.ஜெஸ்ரின் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக புனித பத்திரிசியார் கல்லூரி அதிபர் ஜெறோ செல்வநாயகம் அடிகளார் கலந்துகொண்டு பின்வரும் கலைஞர்களை கௌரவிக்கவுள்ளார். மரபுக்கூத்திசைக்காவலர் அண்ணாவியார் எலியாஸ் வரப்பிரகாசம், கலைச்சுடர் யாக்கோப் அந்தோனிப்பிள்ளை, பல்துறைப் பேராளன் சூசைப்பிள்ளை யேசுதாஸ், அண்ணாவியார் எ.வரப்பிரகாசத்தின் நெறியாள்கையில் 'தர்மப்பிரகாசன்' என்ற தென்மோடி நாட்டுக் கூத்தும் இடம்பெறவுள்ளது. (அ-51)

## வருடாந்த விளையாட்டுவிழா

கமாட்சியம்பாள் முன்பள்ளி மாணவர்களின் வருடாந்த விளையாட்டு விழா இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2மணிக்கு காமாட்சியம்பாள் முன்பள்ளி மைதானத்தில் ஸ்ரீ காமாட்சியம்பாள் சனசமூக நிலைய போசகரும் சமாதான நீதவானுமான த.பரராஜசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ் விழாவில் பிரதம விருந்தினராக சர்வோதய மாவட்ட இணைப்பாளர் அ.கி. சிவசுப்பிரமணியம், சிறப்பு விருந்தினர்களாக அத்தியார் இந்துக்கல்லூரி அதிபர் இ.குணநாதன், நீர்வேலி வலிகிழக்கு பிரதேச சபை உப அலுவலக பொறுப்பதிகாரி திருமதி பே.சுகுமார், க.பேரின்பநாதன், ஓய்வுபெற்ற கமநல சேவை மேற்பார்வையாளர் த.பஞ்சாட்சரதேவன், சமூக அபிவிருத்தி மன்றத் தலைவர் திருமதி ஜெபமணி யோசப் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஓ)

## வாணி விழா

நல்லூர், இளங்கலைஞர் மன்றம் நடாத்தும் வாணிவிழாவின் இரண்டாம் நாள் நிகழ்வு இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணி முதல் 6 மணிவரை மன்ற கலாமண்டபத்தில் தலைவர் க.சோமசேகரம் (ஜே.பி) தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் மன்ற மாணவிகளின் குழு இசையும், "சக்தி வழிபாடு" எனும் தலைப்பில் கவிஞர் சோ.பத்மநாதனின் சொற்பொழிவும், ஆர். வசந்தனின் புல்லாங்குழல் கச்சேரியும், இணுவில் இளந்தொண்டர் சபை மாணவர்களின் நாட்டியாஞ்சலியும் இடம்பெறும். (அ)

## சர்வதேச முதியோர் தின விழா

(யாழ்ப்பாணம்)

கைதடி அரச முதியோர் இல்லத்தில் முதலாம் திகதி முதல் நடைபெற்று வரும் முதியோர் தின விழாவின் ஆறாம் நாள் நிகழ்வுகள் இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு இல்ல அத்தியட்சகர் என். இராசலிங்கம் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.போதனா வைத்தியசாலை கணக்காளர் என். இராசநாயகம், சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி கல்வி வலய கண்க்காளர் செ.செந்தூரன்,ஓய்வுபெற்ற கிராம சேவை உத்தியோகத்தர் எஸ்.செல்வராசா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (அ)




## கண்காட்சி நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் கிராம உப அலுவலக ஆனைக்கோட்டை பொது நூலகத்தில், இவ்வாண்டு தேசிய வாசிப்பு மாதத்தினையொட்டி சுனாமி -2004 எனும் தலைப்பில் கடந்த 3ஆம் திகதி முதல் 5ஆம்திகதி வரை நடைபெற்ற கண்காட்சி அநேக ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் வாசகர்களின் வேண்டுகோளுக்கிணங்க மேலும் இரு தினங்கள் 6,7 ஆம் திகதிகள் நீடிக்கப்பட்டுள்ளதாக வலி. தென்மேற்கு பிரதேச சபை உப அலுவலகப் பொறுப்பதிகாரி ச.சந்திரமவுலி தெரிவித்துள்ளார். (அ)



பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி சமூக விஞ்ஞான மன்றத்தின் "வழி" சஞ்சிகை வெளியீட்டு விழாவில் கல்லூரி அதிபர் என்.தெய்வேந்திரராஜா ஆசியுரை வழங்குவதையும், சிவஸ்ரீ தி.சோமாஸ்கந்தராஜாக் குருக்கள் வெளியீட்டுரை நிகழ்த்துவதையும், சமூக விஞ்ஞான மன்றப் பொறுப்பாசிரியர் ஆர்.நித்தியகுமார் ஏற்புரை நிகழ்த்துவதையும், கல்லூரி பிரதி அதிபர் எம்.இராஜஸ்காந்தன் பிரதம விருந்தினரான வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.நந்தகுமாரிடமிருந்து "வழி" சஞ்சிகையைப் பெற்றுக்கொள்வதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-பரு.நிருபர்)

# நோத்முதல் கோப்லலவா வரை (118)



## பொறுப்பில்லாத சட்டசபை

இந்த இக்கட்டான நிலைமையில் தற் செயலாய் உத்தியோக அங்கத்தவரோ அல்லது அரசாங்கத்தின் பந்தக்காரராய நியமன அங்கத்தவரோ அல்லது வெள்ளைப் பிரதிநிதிகளோ கூட்டத்துக்குப் போக இயலாத சந்தர்ப்பம் ஏற்பட்டால்,இலங்கைப் பிரதிநிதிகள் பிரித்தானிய அரசாங்கத்துக்கு எதிராகப் பிரேரணைகளை நிறைவேற்றிக் கொள்ளலாம் என்ற அச்சம் இருந்தது. எனவே தான் பிரித்தானிய பேரரசின் பாதுகாப்புக்காக இலங்கையின் ஆள்பதி அவர்களுக்கு விசேடித்த வீட்டாணை எனப்படும் மறுப்பாணை வழங் கப்பட்டது.

. முன்னர் 1920 ஆம் ஆண்டின் வேத்தியல் கற்பனை யின் வண்ணம் முறி களை வீட்டாணை செய்யும் அதிகாரம் ஆள் பதி அவர்களுக்கு இருந்தது.

அதன்பின் அவர் 1923 ஆம் ஆண்டின் கழகத்துப் பணியின் XLVII உறுப்பினால் நல்லரசாட்சியின் பொருட்டு அவ்வதிகாரமுடையவராயிருத் தல் வேண் டும் என்று விதிக்கப்பட்டது.

இவ்வாறாகத் தேசிய மகாசபை சிங்களத் ஸ்தாபனமாகவும் தமிழர் ஸ்தாபனமாகவும் தடம் புரண்டு பிரிந்து நிலவி அரசியற்றிருத்தங்கோரிய காலத்திலே 1922 ஆம் ஆண்டிலே இலங்கைத் தொழிலாளர் சங்கம் திரு ஏ.ஈ.குணசிங்க அவர்கள் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது. அவர் தமது மோட்டார் வண்டியில் சிவப்புக் கொடியைப் பறக்கவிட்டு ஓட்டித் திரிந்தமை கொழும்பில் பெரிய பரபரப்பை உண்டாக்கிற்று. அவர் கொழும்பு மாநகரத்துத் தொழிலாளர் கவனத்தை வெகுவாகக் கவர்ந்தார்.

### மீள் பார்வை

அவருடைய தலைமையிலேயே 1923,1925 ஆகிய ஆண்டுகளில் வேலை நிறுத்தங்கள் முதன் முதலாக ஏற்பட்டன. வேலை நிறுத்தத்துக்கு அக் காலத்தில் கூலிக் குழப்பம் என்ற பெயர் வழங்கியது. குணசிங்க அவர்களுடைய முயற்சியால் இரண்டு காரியங்கள் நிறைவேறின.

அவை தொழிலாளர் ஒன்று திரண்டமையும், இருபத்தொரு வயதுக்கு மேற்பட்ட எல்லோ ருக்கும் சர்வசன வாக்குரிமை வழங்கப்பட்டமையுமாகும். அதனால் நடுவகுப்பாரேயன்றிப் பொதுமக்களும் அரசியலில் ஈடுபடுவாராயினர். அதனால் மக்களாட்சிக்கு அத்திபாரம் இடப்படலாயிற்று.

### சேர் பொன்னம்பலம் அருணாசலம் அவர்கள் (14.9.1853-9.1.1924)

தோன்றும் பொழுதே புகழுடன் தோன்றிய பொன்னம்பலம் சகோதரர் மூவருள் அருணாசலம் இளையவர். அவருக்கு மூத்தவர் இராமநாதன். அவரிருவருக்கும் மூத்தவர் குமாரசுவாமி .மூவரும் இலங்கைச் சட்டசபையை அலங்கரித்த அறிவாளிகள். கோல்புறூக் திருத்தத்தின் வண்ணம் 1833 ஆம் ஆண்டில் இலங்கையில் அமைக்கப்பட்ட சட்டசபையிலே முதன் முதலாகத் தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டவர் ஆறுமுகத்தாபிள்ளை குமாரசுவாமி என்னும் முதலியாராவர். குமாரசுவாமி முதலியாரின் மைந்தரே சேர். முத்துக் குமாரசுவாமி. சேர்.முத்துக்குமாரசாமியின் மைந்தரே கலாயோகி ஆனந்தக் கென்ரிஸ் குமாரசுவாமி என்னும் அருங்கலை விநோதராவர்.

சேர் முத்துக்குமாரசுவாமியின் சகோதரியார் செல்லாச்சி என்பாரைப் பொன்னம்பல முதலியார் திருமணஞ் செய்திருந்தார். அவர் பொன்னம்பலத் தருமவான் என்னும் பெரியாரின் வழித்தோன்றல். பொன்னம்பல முதலியாரும் செல்லாச்சி அம்மையாரும் பெற்றெடுத்த மைந்தர்களே குமாரசுவாமி, இராமநாதன், அருணாசலம் என்னும் மூவருமாவர்.



பொன்னம்பலம் அருணாசலம் (1853-1924)

அருணாசலம் அவர்கள் 14.9.1853 இல் பிறந்தவர்.

அருணாசலம் தமது காலத்தில் தலை சிறந்த அறிவாளியாயும், அரசாங்க உத்தியோகத்தராயும், அரசியற் பண்டிதராயும் அறிவு நூற் புலவராயும், தத்துவ சாத்திரியா யும், மொழிப்பற்று,நாட்டுப்பற்று, சமயப் பற்று நிறைந்த உத்தமராயும், இருந்து அளப்பரிய சேவை செய்தவர். அவரைப் போன்ற அரசியல் ஞானியையும் வித்தியா விற்பன்னரையும் இலங்கை என்றும் கண்டதில்லை.

க.சி.குலரத்தினம்

கொழும்பிலுள்ள இராசாங்கக் கல்லூரி என்னும் றோயற் கல்லூரியிலே அருணாசலம் கல்வி கற்ற காலத்திலே அங்கே ஆசிரியராயிருந்த வெள்ளைக்காரருடைய நன்மதிப்பையும், பாராட்டுதலையும், அன்பை யும் பெற்றுக் கொண்டார். தலை சிறந்த மாணவராயிருந்தமையோடல்லாமல், அருணாசலம் கவர்ச்சிகரமான பல பரிசுகளையும் காலத்துக்குக் காலம் ஈட்டிக் கொண்டார்.

அப் பரிசுகளில் ஒன்று பாரம் பரியமாகக் குடும்ப சரித்திரப் பிரசித்தி பெற்றதாய் விளங்கிற்று.

(தொடரும்)





பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள பாலவிகாஸ் (சிறுவர்) தினத்தன்று யாழ். சாயி நிலையத்தில் மனித மேம்பாட்டுக் கல்வி கற்கும் சிறுவர்கள், பெற்றோர் திருவடிகளுக்குப் பூசை செய்து வணங்கி ஆசீர்வாதம் பெறுவதையும் உலகளாவிய இரத்ததான நிகழ்வையொட்டி யாழ். சாயி நிலையத்தில் பக்தர்கள் இரத்ததானம் செய்வதையும் படங்களில் காணலாம்.

# எமது பாரம்பரிய பிரதேசத்திற்குப் பொருத்தமான மாற்றுச்சக்தி வளங்கள்: ஒரு புவியியல் நோக்கு (3)

1.3 மரபுரீதியாக சக்தியைப் பயன்படுத்தி மின்சார மயமாக்கப்பட்ட கைத்தொழில் நாடுகளையும் நகரங்களையும் சார்ந்த மக்களை விட மூன்றாம் உலகக் கிராமிய மக்களே சூரிய மின்கலங்களால் அதிக பயனைப் பெற்றுக்கொள்ளமுடியும். மூன்றாம் உலகக் கிராமங்கள் சூரியமின்கலங்கள் மூலம் பின்வரும் பயன்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

- வீட்டுப் பாவனைக்கு மட்டுப்படுத்தப்பட்ட மின்சாரத்தைப் பெறல்.
- சிறிய அளவிலான விவசாய நிலங்களுக்கு நீரிறைத்தல்.
- கிராமிய வைத்தியசாலைகளில் குளிரூட்டிகளை இயங்கச் செய்தல்.
- கலங்கரை விளக்குகள், வீதி விளக்குகள் பொருத்துதல்.
- கிராமத்திற்குத் தேவையான நீரை வெப்பமேற்றிச் சுத்திகரித்தல்..
- தொலைத் தொடர்பு சாதனங்களை இயங்கச் செய்தல்.
- வாகனங்கள், படற்கிற்குரிய மின்கலங்களுக்கு மின் ஏற்றம் செய்தல்.

நாம் தற்பொழுது எதிர்நோக்குகின்ற எரிபொருள் விலையேற்றத்தின் பாதிப்பிலிருந்து ஓரளவு விடுபடுவதற்கு சூரிய மின்கலங்களைப் பாவிக்கமுடியும். வீட்டுப் பாவனைக்கேற்ப சூரிய மின்கலங்கள் பல்வேறு அளவுக்கு யாழ்ப்பாண வர்த்தக நிலையங்களில் கிடைக்கின்றன. இவை 10 W -120W வரையான மின்சக்தியை வழங்கக் கூடியன. ஒரு சூரிய மின்கலத்தினை 15 வருடங்களுக்கு பாவிக்கமுடியும். இவற்றில் ஒன்றைப் பெற்று சூரிய ஒளிபடும் கூரையின் மீது வைத்து கார் பற்றறி (12V) ஒன்றுடன் அதனை இணைத்து விடுவோமாயின் பகலில் மின் ஏறும்.



பற்றியில் இருந்து பெறப்படும் மின் சாரத்தை எமது தேவைக்கேற்ப பகலிலும் இரவிலும் பயன்படுத்த முடியும். சிறிய அளவிலான மின் குமிழைப் பொருத்துவதன் மூலம் வீட்டிற்கு தேவையான மின் ஒளியை நாம் பெற்றுக்கொள்ள முடியும். வானொலி, தொலைக்காட்சி,சிறிய மின்விசிறி, ஓடியோ வீடியோ சாதனங்கள் என்பவற்றையும் இயக்கமுடியும். மீள் மின்னேற்றம் பெறத்தக்க டோர்ச் பற்றறி, பென்டோர்ச் பற்றிகளுக்கும் மின் ஏற்றமுடியும்.

சிறிய அளவிலான குளிர்சாதனப் பெட்டிகளையும் இயக்கவைக்க முடியும். சூரிய மின் கலங்களின் பாவனை பற்றிய விழிப்புணர்வை எமது மக்களுக்கு ஏற்படுத்துவதன் மூலம் வீட்டை ஒளிபெறச் செய்ய முடியும். எமது மாநகரசபை, கிராமசபைகளும் ஏனைய மக்கள் நிறுவனங்களும் வீதிகளில் சூரிய மின்கல விளக்குகளை பொருத்தும் வாய்ப்புகள் பற்றிச் சிந்திக்கலாம்.

எமது பிரதேசத்தில் பரந்துள்ள வெண் மணல் குறிப்பாக மணற்காட்டுமண் சூரிய - மின்கலங்கள் தயாரிக்கக் கூடிய "சிலிக்கன்" கனிமத்தைப் பெருமளவு கொண்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இலங்கையின் மக்கள் தொகையில் 48 வீதத்தினர் முக்கியமாக கிராமத்து மக்கள் இதுவரை மின் இணைப்பைப் பெறவில்லை. எனவே சூரிய மின்கலங்களைக் குறைந்த விலையில் அல்லது தவணை முறையில் பணம் செலுத்தும் வசதியை ஏற்படுத்தி அறிமுகப்படுத்துவதில் "செல்கம்பனி" உதவி வழங்கி வருகின்றது.

இதற்கு திருவாளர்கள் விவின் பெரேரா, லலித் குணவர்த்தனா,பிரதீப் ஜெயவர்த்தனா (ஜே.ஆர்.இன் பேரன்) போன்றோர் 1986 முதல் ஆலோசனைகளையும் உதவிகளையும் வழங்கி வருகின்றார்கள்.

### 2.0 காற்றுச் சக்தி வளம் (Wind Energy Resource)

எமது பாரம்பரியப் பிரதேசத்திற்குப் பொருத்தமான மாற்றுச்சக்தி வளங்களின் சூரிய சக்தியை எவ் வகையில் பயன்படுத்தலாமென்பதைப் பற்றி ஆராய்ந்தோம். இக்கட்டுரை கார்றுச் சக்தி வளத்தை எமது பிரதேசத்திற்கு பொருத் தமான முறையில் எவ் வகையில் பயன்படுத்தலாமென்பது பற்றி ஆராய்கின்றது.

2.1 பல ஆண்டுகளுக்கு முன்னரேயே குறிப்பாக ஐரோப்பிய நாடுகளில் காற்றாடியின் இயக்க சக்தியினால் ஆறு, குளம், கிணறுகளிலிருநது வயல் நிலங்களுக்கு நீரிறைக்கும் வழக்கம் இருந்து வந்துள்ளது.

அண்மைக் காலங்களில் புகுத்தப்பட்ட புதிய தொழில்நுட்பங்களில் காற்றாடியினை இலகுவாகச் சூழலச் செய்தல் சாத்தியமாகி உள்ளது.

இதனால் மெல்லிய காற்று விசையிலும் காற்றாடியை இலகுவாகச் சூழலச் செய்ய முடிவதோடு மின்சாரத்தைப் பெறுவதற்குரிய ஜெனரேட்டர்களையும் இயங்கச் செய்யமுடியும்.

பேராசிரியர் இரா.சிவச்சந்திரன்
தலைவர் ,சமூகவியல்துறை
இணைப்பாளர்,புறநிலைப்படிப்புகள் அலகு
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

வீடுகள், கட்டடங்களளை விட உயரமாக காற்றாலைகள் அமைப்பதற்கு உலோகச் சட்டங்கள் பயன்படுத்த வேண்டுமாகையால் ஆரம்பச் செலவு அதிகமாக உள்ளது.

ஆனால் நீண்டகாலத்திற்கு எந்தச் செலவுமின்றி பயனை நுகரக் கூடியதாக உள்ளது. கடலால் சூழப்பட்டு சமவெளிகளைக் கொண்ட நாடுகளில் காற்று சக்தியினைப் பயன்படுத்தும் வாய்ப்புகள் அதிகமாகும். (தொடரும்)

# பாகிஸ்தானுடன் அணு ஒப்பந்தம்; எண்ணம் எதுவும் இதுவரை இல்லை

## அமெரிக்கா தெரிவிப்பு

(வோஷிங்டன்)


இந்தியாவைப் போல பாகிஸ்தானுடன் அணுசக்தி ஒப்பந்தம் செய்து கொள்ளும் எண்ணம் எதுவும் இதுவரை இல்லை என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

அமெரிக்க வெளியுறவு அமைச்சக தகவல் தொடர்பாளர் சீன் மெக்கர்மாக் கூறியதாவத, அணு ஆயுத பரவல் தடை விஷயத்தில் இந்தியாவின் கடந்த கால செயற்பாடுகள் வெளிப் படையான பாதுகாப்பான அணுகு முறையாகும்.

அந்த அடிப்படையில் அந்நாட்டுடன் அணுசக்தி ஒப்பந்தம் மேற்கொள்ள வேண்டும் என மற்ற நாடுகள் கோரும் என சொல்ல முடியாது. இந்தியாவைப் போல பாகிஸ்தானுடன் அணுசக்தி ஒப்பந்தம் செய்து கொள்ளும் எண்ணம் எதுவும் தற்போதைக்கு இல்லை தங்கள் நாட்டுடனும் அணுசக்தி ஒப்பந்தம் மேற்கொள்ள வேண்டும் என பாகிஸ்தான் தலைவர்கள் யாரும் சமீபத்தில் கோரிக்கை விடுக்கவில்லை அமெரிக்க வெளியுறவு அமைச்சர் கொண்டலிசா ரைஸை சந்தித்த போது இதுபற்றி விவாதிக்கவில்லை. இவ்வாறு மெக்கர்மாக் கூறினார்.

(அ-6)

# ஒட்டிப்பிறந்த இரட்டைப்பிறவி



(பாங்கொக்)

ஒட்டிப் பிறந்த இரட்டைக் குழந்தைகளை பற்றியும், அறுவை சிகிச்சை மூலம் அவர்கள் பிரிக்கப்படுவதையும் பார்த்தும், படித்தும் இருக்கிறோம். இவை ஒட்டிப் பிறந்த இரட்டை மீன்கள்.

தாய்லாந்து தலைநகர் பாங்கொக்கில் உள்ள நீர் அருங்காட்சியகத்தில் உள்ளன. பிறந்து 8 மாதங்கள் ஆகின்றன.

கீழே உள்ள சின்னவனுக்கு ஏதேனும் ஆபத்து வந்தால் தனக்கு வந்ததாக கருதி பெரிய மீன் தாக்குதலுக்கு தயாராகுமாம். தொட்டியின் கீழ்ப் பகுதியில் உள்ள உணவுகளைக் குறிவைத்து சின்ன மீன் விழுங்குமாம்.

(அ-6)

# 'சுப்பர் கட்ச்' என்னாலும் முடியும்



(கலவுன்)


கிரிக்கெட் வீரர்களால் மட்டும்தான் கட்ச் பிடிக்க முடியுமா? என்னாலும் பிடிக் முடியும் என்பதை சொல்லாமல் செய்து காட்டுகிறது இந்த ஆல்பர்ட் எனும் நீர்யானை.

மேற்கு ஜெர்மனியில் கலவுன் நகரில் உள்ள உயிரியல் பூங்காவில்தான் இந்தக் காட்சி. அங்குள்ள ஊழியர்கள் உணவுப் பொருட்களை வழங்குவது வழக்கம். அதன் பட்டி ஒரு பூசணிக்காயை தூக்கிப் போட லாவகமாக கட்ச் பிடித்து லபக்குகிறான் ஆல்பர்ட். அருகில் உள்ள கவங்கோ நீர்யானை அடுத்த கட்சை எதிர்பார்கிறது.

(அ-5)

# 80 ஆயிரம் அகதிகளை அமெரிக்காவுக்குள் உள்வாங்க ஜனாதிபதி புஷ் நடவடிக்கை

(வோஷிங்டன்)



கடந்த புதன்கிழமை முதல் ஆரம்பமாகும் புதிய நிதியாண்டில், உலகெங்குமுள்ள 80 ஆயிரத்துக்கு மேற்பட்ட அகதிகளுக்கு அமெரிக்காவில் நுழைய வரவேற் பளிக்கப்படும் என அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் தெரிவித்தார்.

இதன் பிரகாரம் ஆபிரிக்காவிலிருந்து 12 ஆயிரம் பேரும் கிழக்கு ஆசியாவிலிருந்து 19 ஆயிரம் பேரும், ஐரோப்பாவிலிருந்தும் மத்திய ஆசியாவிலிருந்தும் 2 ஆயிரம் 500 பேரும் லத்தீன் அமெரிக்கா மற்றும் கரிபியன் பிராந்தியத்திலிருந்து 4 ஆயிரத்து 500 பேரும் அண்மைய கிழக்கு மற்றும் தென் ஆசியாவிலிருந்து 37 ஆயிரம் பேரும் மேலதிகமாக 5 ஆயிரம் பேரும் அமெரிக்காவினுள் உள் வாங்கப்படவுள்ளதாக கூறப்படுகிறது.

(அ-6)

# புதிய அரசியல் கட்சி தொடங்குகிறார் ரஷ்யாவின் முன்னாள் அதிபர் கொர்பசேவ்

(மொஸ்கோ)

ரஷ்யா கம்யூனிஸ்ட் கட்சியின் ஆதிக்கத்தில் இருந்தபோது அதன் அதிபராக இருந்தவர் கொர்பசேவ். இவரது ஆட்சியின் போது தான் கம்யூனிஸ்ட் கட்சி, ஆட்சி பீடத்தில் இருந்து தள்ளப்பட்டது. ரஷ்யா சிதறுண்டது. அவர் இப்போது புதிய அரசியல் கட்சியை தொடங்க திட்டமிட்டு வருகிறார்.

புதின் அதிபராக இருந்த 8 ஆண்டு காலங்களில், அவர் ஜனநாயகத்தை நோக்கி சென்ற ரஷ்யாவை பின்னுக்கு இழுத்து விட் டார். பொருளாதாரத்தின் மீது அரசுக்கட்டுப் பாடுகளை மீண்டும் கொண்டு வந்தார்.

இதனால் வெறுத்துப்போய் தான் அவர் அரசியல் கட்சி தொடங்க திட்டமிட்டு இருக்கிறார்.

முன்னாள் எம்.பியும்.கோடீஸ்வரருமான அலெக்சாண்டர் லெபெடேவ் உடன் சேர்ந்து சுதந்திர ஜனநாயகக் கட்சி என்ற பெயரில் புதிய கட்சி தொடங்க இருக்கிறார்.

77வயாதான கொர்பசேவ், வெளிநாடுகளில் பிரபலமானவர்.

ஆனால் சொந்த நாட்டில், அவரது செல்வாக்கு குறைவு. 1996 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் அவருக்கு ஒரு சத வீதத்துக்கு குறைவான வாக்குகளே கிடைத்

# கொழும்பை பாதுகாக்க விசேட படைப்பிரிவு இயங்கும்

(கொழும்பு)

தலைநர் கொழும்பை பாதுகாப்பதற்காக விசேட படைப்பிரிவு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தமிழீழ விடுதலைப்புலிகளினால் மேற்கொள்ளப்படும் தாக்குதல்களை கட்டுப்படுத்தவும் விடுதலைப்புலி உறுப்பினர்களை கைது செய்வதற்கும் இந்த விசேட பிரிவு பயன் படுத்தப்படவுள்ளது.

குறித்த விசேட படைப்பிரிவில் சுமார் 800 பேர் ஆரம்பக்கட்டமாக இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் ஆலோசனைப்படி இந்த விசேட படைப்பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த விசேட படைப்பிரிவு 8 கிளைகளைக்கொண்டு இயங்கவுள்ளதாகவும் சிலாபம், நீர்கொழும்பு, வத்தளை, மருதானை, களனிய, வெதமுல்ல, பம்பலப்பிட்டி, பாணந்துறை, மலசேகரமாவத்தை மற்றும் மெகலாம் வீதி ஆகிய இடங்களில் இந்த கிளைகள் நிறுவப்பட்டுள்ளன.

எதிர்காலத்தில் குறித்த விசேட படைப் பிரிவு பல்வேறு பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப் படுகிறது.

சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சந்தன குடாஹெட்டியின் தலைமையின் கீழ் இந்த விசேட பாதுகாப்புப் படைப்பிரிவு இயங்கவுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

(ந-6)

# இணையத்தளத்தை பார்த்த விபரீதம் 10பேரை சுட்டுக்கொன்ற மாணவன்

## பின்லாந்தில் பயங்கரம்

(பின்லாந்து)

பின்லாந்தின் ஹெல்சிங்கி அருகே உள்ள ஒரு பள்ளியில் படித்து வந்தமாணவன் மாதீ ஜஹானிசாரி. (22வயது) என்ற மாணவன் யுடிப் இணையத்தளத்தில் கொடூர விளையாட்டுக்களை அடிக்கடி பார்த்து வந்தான்.

சம்பவத்தன்று அவனது பள்ளியில் பரீட்சை நடந்துகொண்டிருந்தது. அப்போது அந்த மாணவன் முகமூடி அணிந்து கொண்டு துப்பாக்கியால் சரமாரியாக மற்றவர்களை நோக்கி சுட்டான்.

இதில் சகமாணவ, மாணவிகள் 8பேர் உட்பட 10பேர் குண்டுபாய்ந்து அந்த இடத்திலேயே பலியாகினர்.

பொலிஸார் விரைந்து வந்து அந்த மாணவரை கைது செய்து விசாரணை நடத்தினர். அப்போது அந்த மாணவன் தன்னைத் தானே துப்பாக்கியால் சுட்டுத் தற்கொலை செய்துகொண்டான்.

கடந்த 2002ஆம் ஆண் முதல் அந்த மாணவன் இணையத்தளத்தில் கொடூர வீடியோ விளையாட்டைப் பார்த்து ரசித்து வந்ததாகவும் அப்போதே கொலை செய்ய திட்டமிட்டதாகவும் தெரிவித்தான்.

இப்போது இணை யத்தளத்தில் அந்த கொடூர விளையாட்டுக்கு தடை விதிக்கப் பட்டுள்ளது.

(ந-6)

# உரிய முறையில் செயற்திட்டங்களைப் பூர்த்தி செய்யாத மாணவர்களுக்கு பல்கலைக்கழக அனுமதியில்லை

## பரீட்சைக்கு தோற்றவும் முடியாது- பரீட்சை ஆணையாளர்

(கொழும்பு)

உரிய முறையில் செயற்திட்டங்களை பூர்த்தி செய்யாத 21 வயதிற்குட்பட்ட உயர்தரப் பரீட்சை மாணவர்களுக்கு தனியார் பரீட்சார்த்திகளாக பரீட்சையில் தோற்றுவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட மாட்டாது என கல்வித் திணைக்களம் தெரிவிக்கின்றது.

அத்தகைய பரீட்சார்த்திகள் தமது வலயக் கல்விப் பணிமனையில் பதிவு செய்து கொள்ள வேண்டுமென பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அனுர எதிரிசிங்க கூறினார்.

இவர்கள் உயர்தரப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் போது உரிய முறையில் செயற்திட்டங்களைப் பூர்த்தி செய்யாதுள்ளார்களா? என்பதை உறுதிப்படுத்த வேண்டுமெனவும் பரீட்சார்த்திகளால் சமர்ப்பிக்கப்படும் தகவல்களைக் கல்வித் திணைக்களம் ஊடாக பரிசீலிக்க உள்ளதாகவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் கூறினார்.

செயற்திட்டங்களைப் பூர்த்தி செய்யாத உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர் களுக்கு பல்கலைக்கழக அனுமதி கிடைகாதெனவும் இது தொடர்பான சுற்றறிக்கை கல்வி அமைச்சின் மூலம் விரைவில் வெளியிடப்படும் எனவும் பரீட்சைகள் ஆணையாளர் அனுர எதிரிசிங்க மேலும் தெரிவித்தார்.

(அ)

# அதிகாரங்கள் கொழும்பில் மட்டும் குவிந்திருக்கக் கூடாது

## பிரதம நீதியரசர்

(கொழும்பு)

இலங்கை அரசியல் அமைப்பின் 13ஆவது ஷரத்துக்கு மேலாக நீதித்துறையைப் பொறுத்த வரையில் நாம் அதிகாரங்களைப் பகிர்ந்தளித்துள் ளோம்.

அதிகாரம் யாவும் கொழும்பில் குவிந்திருக்கக்கூடாது. மட்டக்களப்பு நீதி மன்றங்களுக்குஆட்சேர்ப்பு செய்யவேண்டுமாயின் மட்டக்களப்பிலேயே விண்ணப்பங்களைக் கோரி நியமனங்களை வழங்கும் அதிகாரத்தை வழங்கியுள்ளேன்.

இவ்வாறு பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா கூறினார்.

மட்டக்களப்பு சிவில் நீதி மன்ற மேன்முறையீட்டு நீதிமன்றத்தை வைபவ ரீதியாக திறந்து வைப்பதற்காக அவர் மட்டக்களப்புக்கு விஜயம் செய்தார்.

பிரதம நீதியரசர் மேலும் பேசியதாவது,

இலங்கையில் சமாதானம் ஏற்பட வேண்டும் யுத்தத்தினால் இறப்பவர்கள் அனைவரும் இந்த நாட்டு மக்களாவர் தனி ஒருவர் இறந்தால் அது இந்த நாட்டில் ஒருவரின் இறப்பாகும் தனி ஒருவர் அபிவிருத்தியடைந்தால் அது நாட்டினுடைய அபி விருத்தியாகும்.

கிழக்கு மாகாணம் தனியாகவேஇருக்க வேண்டும் அது ஏனைய மாகாணங்களுக்கு முன் உதாரணமாக அபிவிருத்திகாண வேண்டும்.

மட்டக்களப்பு நீதிமன்ற கட்டிடத் தொகுதியை நவீன கட்டட தொகுதியாக மாற்ற ஆவன செய்வேன் .. இன்று எனக்கு சிறப்பான முறையில் வரவேற்று அளிக்கப்பட்டது.

நான் பிரதம நீதியரசராவதற்கு முன்னர் இங்கு வந்த போது எம்.எம். முஸ்தபாவை சந்தித்தேன் .

அது 1994ஆம் ஆண்டாகும். அப்போது நாட்டில் விரைவில் சமாதானம் ஏற்படும் என்று நான் அவரிடம் கூறினேன்.

அதை மறுத்த அவர் சமாதானம் அவ்வாறு விரைவில் ஏற்பட மாட்டாது என்று பதிலளித்தார். அவர் கூறியது தான் சரியாக உள்ளது. என்பதை இப்போது நினைவு கூருகின்றேன்.

கிழக்கில்தமிழ் அரசகருமமொழியாக இருக்கிறது. இருந்தாலும் தமிழில் பேச முடியாமைக்கு வருந்துகிறேன் என மேலும் தெரிவித்தார்.


(அ-6)



# Lifeline
# மீண்டும் வாழ்வோம்
இடம்பெயர்ந்த மக்களுக்கான மனிதாபிமான தகவல் பரிமாற்றம்
Humanitarian Information For IDPs

## வன்னியில் மனிதாபிமான நெருக்கடிகளுக்கு தீர்வுகாண முனைப்புகள்

இலங்கை அரசாங்கத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக வன்னியில் செயற்பட்டு வந்த அனைத்து மனிதாபிமான அமைப்புக்களும் வவுனியாவிற்கு தமது செயல்பாடுகளை நகர்த்தியுள்ளன. இதன் காரணமாக வன்னிப் பிராந்தியத்தில் ஏற்பட்டுள்ள மனிதாபிமான பணிகளுக்கான இடைவெளிகளை குறைப்பதற்கு பல்வேறு நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுத்துள்ளது. இடம் பெயர்ந்து வாழும் மக்களுக்கு உணவுப் பொருட்கள் அதிகளவில் தேவையாகவுள்ள இந்தக் காலகட்டத்தில் அம்மக்களுக்கு வவுனியா ஊடாக உணவுப் பொருட்களை அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கைகளை இலங்கை அரசு மேற்கொண்டு வருகிறது. இது குறித்து இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார கருத்து வெளியிடுகையில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் நாகலிங்கம் வேதநாயகன் அப் பகுதிகளில் உணவுக்கான தட்டுப்பாடு இல்லை என்று கூறியுள்ளதாகவும் அரசாங்கம் வன்னிக்கு உணவுப் பொருட்களை தொடர்ச்சியாக அனுப்பி வருவதாகவும் குறிப்பிட்டார். கிளிநொச்சிமற்றும் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர்களின் வேண்டுகோள்களுக்குஅமைவாக அவர்களுக்கு தேவைப்படும் உணவுப் பொருட்கள் ஓமந்தைச் சோதனைச் சாவடி ஊடாக தினமும் அனுப்பி வைக்கப்படுவதாக இராணுவப்பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார். உலக உணவு ஸ்தாபனம் வழங்கியுள்ள



சுமார் 5000 மெற்றிக் தொன் அளவிலான உணவுப் பொருட்கள் வவுனியாவில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள தாகவும் தேவை அடிப்படையில் உணவுப் பொருட்களைவன்னிக்கு. அனுப்புவதற்கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் கூறி னார்.

இதே வேளை கிளிநொச்சி மாவட்ட மக்களுக்குத் தேவையான மருத்துவ வசதிகளை கிளிநொச்சிமாவட்டபொது வைத்தியசாலை வழங் கிவருகிறது.

கிளிநொச்சி மாவட்டவைத் திய அதிகாரி வைத்திய கலாநிதி சத்திய மூர்த்தியிடம் வைத்தியசாலையின் செயல்பாடுகள் பற்றி கேட்ட போது தமது மருத்துவமனையின் தேவைகளுக்கு ஏற்ற வகையில் மருந்துகள் கையிருப்பில் உள்ளதாகக் குறிப்பிட்டார்.

இடம் பெயர்வுகளால் அதிகளவு சுவாச நோய்கள் மக்களுக்கு ஏற்பட்டு வருவதாகவும் இதற்கான சிகிச்சைகளுக் காகவே பெருமளவான மக்கள் மருத்துவ மனைக்கு வருவதாகவும் அவர் கூறினார்.

தீவிர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட வேண்டிய நோயாளர்களை வவுனியா வைத்தியசாலைக்கு நோயாளர் காவு வாகனங்கள் மூலம் அனுப்பி வைக்கப்படுவதாகவும் வவுனியாவில் சிகிச்சை பெற்று திரும்பும் நோயாளர்களும் கிளிநொச்சி திரும்புவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தினசரி 3நோயாளர் காவு வாகனங்கள் மூலம் நோயாளிகளை ஓமந்தை சோதனை சாவடிக்கு அனுப்பி வருவதாகவும் அங்கு மாற்று வாகனங்கள் மூலம் வவுனியா வைத்திய சாலைக்கு அவர்கள் கொண்டு செல்லப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்நடவடிக்கையின்மூலம் தினமும் 50 நோயாளர்கள் வரையில் வவுனியா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்படுவதாக சத்திய மூர்த்தி தெரிவித்தார்.

இதேவேளை வன்னியி லிருந்து இடம் பெயரும் மக்கள் வவுனியா நோக்கிவரக் கூடும் என்ற எதிர் பார்ப்பில் வவுனியாவில் அம் மக்களுக்கான இடைத் தங்கல் முகாம்களை தயார்படுத்தும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. வன்னியில் இருந்து வவுனியா நோக்கி இடம் பெயரும் மக்களுக்கு அவர்களது அடிப்படைத் தேவைகளையும் பூர்த்தி செய்வதற்குரிய ஏற்பாடுகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருவதாக வவுனியா மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சார்ள்ஸ் கூறியுள்ளார்.

இடைத்தங்கல் முகாம்களைத் தயார் செய்தலில் தாங்கள் ஈடுபட்டுள்ளதாகவும் அதே நேரத்தில் அவர்கள் தொடர்ந்து தங்குவதற்கான தேவை செய்யப்பட்டுள்ள 3இடங்களும் தயார் படுத்தப் பட்டு வருவதாகவும் அவர் கூறினார் .

ஐக்கிய நாடுகள் அமைப்பின் நிறுவனங்களுடன் சேர்ந்து அரச திணைக்களங்களின் தலைமையில் ஏற்படுத்தப்பட்டுள்ள உப குழுக்கள் அவசரகால திட்ட வரைவுகளைத் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளதாகவும் மேலதிக அரசாங்க அதிபர் கூறினார்.

**மீண்டும் வாழ்வோம்**

"மீண்டும் வாழ்வோம்" திட்டமானது இலங்கையின் அசாதாரண சூழ்நிலைகளினால் இடம் பெயர்ந்து முகாம்களில் வாழும் மக்களுக்காகவும் மீள் குடியேறி உள்ளவர்களுக்காகவும் தகவல்களை வழங்கும் பரந்துபட்ட மனிதாபிமான செயற்திட்ட அமைப்புக் களின் ஓர் அங்கமாகும்.

## இயற்கை வளத்தை சீண்டும் இரசாயனம்

அனைத்து உயிரினங்களும் உயிர் வாழ்வதற்கு குடிநீர் அத்தியாவசியப் பொருளாகின்றது. குடி நீர் மாசடை ந்தால் உயிரினங்களின் நிலையென்ன வாகும் என்பதைக் கற்பனை செய்து பார்த்தோமானால் நினைத்துக்கூடப் பார்க்க முடியாத அவலங்கள்எம் கண்முன் விரிகின்றன. அத்தகைய ஒரு கொடூர நிலைமைக்கு புத்தளம், கற்பிட்டி வாழ்மக்கள் இன்று ஆளாகியிருப்பது கவலைக் குரியவிடயமே.

குடி நீரே அவர்களுக்கு விஷமாக மாறி விட்டது. கிணற்றுத் தண்ணீரையே பருகி உயிர் வாழும் கற்பிட்டி மக்கள் தமது குடிநீர் ஒரு சில நாட்களிலேயே நிறம் மாறி செந்நிற புழுக்கள் மிதப்பதைக் கண்டு செய்வதறியாத நிலையில் இருக்கின்றனர்.



இதற்கான காரணம் என்னவாக இருக்குமென அறிய முற்பட்ட போது நிலக் கீழ் தண்ணீருடன் மலக்கழிவுகள் கலந்துள்ளமை பல ஆய்வுகளையடுத்து கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. அது மட்டுமன்றி வேறு சில வகைகளிலும் நீர் மாசடைந் துள்ளது.

புத்தளம் மாவட்டம் DL3 என்ற கால நிலை வலயத்தின் கீழ்அமைந்துள்ளது. புத்தம் வாழ் மக்கள் மட்டுமல்லாமல் பொதுவாக அனைவருமே நிலக்கீழ் நீரைத் தான் பாவனைக்கு எடுத்துக் கொள்வதுடன் குடி நீராகவும் பயன்படுத்துகின்றோம். தொடர்ச்சியாக அவ்வாறு நீரைப் பயன்படுத்தும் போது ஏற்படும் குடிநீர் இடைவெளியை கடல் நீர் புகுந்து நிரப்பி வருவதைக் காண கூடியதாக இருப்பதாக புத்தளம், கற்பிட்டி பிரதேச சுற்றாடல் அலுவலர் எம்.ஏ.சி ரபீக் குறிப்பிட்டுள்ளார்.

பயிர்ச் செய்கைகளின் போது அதிக இலாபம் கருதியோ என்னவோ அளவுக்கதிகமாக யூரியா என்ற இரசாயனப் பசளையை பாவிக்கின்றார்கள். பெருகி வரும் மக்கள் தொகைக்கேற்ப இருப்பிடங்களுக்கான கேள்வி எழுந்துள்ளது இருப்பிடப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய மனிதன் கையாளும் யுத்திகளில் ஒன்று தான் கடற்கரையை அண்டிய பகுதிகளை ஆக்கிரமிப்பது. இதன் காரணமாக கடற்கரையோரங்களில் உள்ள நீர்த் தாளைகளை அழித்து வருகின்றனர். மேற்கூறிய காரணங்கள் கூட நீர் மாசடைவதற்கான பிரதான காரணங்களாக கருதப்படுகின்றன.

அண்மையில் கற்பிட்டியிலுள்ள பெண்கள் மத்தியில் நடத்தப்பட்ட ஆய்வில் அதிகமான கருச்சிதைவு ஏற்படுகின்றது என்ற திடுக்கிடும் தகவலும் வெளியாகயுள்ளது. இந்தக் கருச்சிதைவுக்கு நீரில் அளவுக்கதிகமாகக் கலந்துள்ள நைட் ரேல் காரணமாக அமைந்துள்ளதாகக் கண்டறியப் பட்டுள்ளது. அத்தோடு இந்த குடிநீரைக் குடிக்கின்றசிறு பிள்ளைகளுக்கு ஒட்சிசன் சரியானமுறையில் சென்றடையாத காரணத்தினால் சுவாசக் கோளாறு நோய் ஏற்பட்டு இறக்கின்றனர் என்பதும் ஓர் கசப்பான உண்மை. அத்தோடு இறந்த பிள்ளைகளின் உடல்கள் 24 மணி நேரத்திற்கும் அதிகமாக வைக்கப் பட்டிருந்தால் நீல நிற மாக மாறி விடுவதும் ஆய்வில் உறுதி செய் யப்பட்டுள்ளது. நீரில் காணப்படும் புளோ ரைட்டின் அளவு அதிகமாக காணப்படுகின்றமையினால் பற்கள் சிதைவடைவதுடன் முகங்களும் விகார மடைவதாக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த மாசடைதலைத் தவிர்ப்பதற்கு பாடசாலை மட்டங்களில் முயற்சிகள் எடுக்கப்பட்டிருப்பதாக கற்பிட்டிப் பிரதேச சுற்றாடல் அலுவலர் எம்.ஏ.சி.ரபீக் தெரிவித்துள்ளார்.

பாடசாலைகளில் மூன்று வகை யான திட்டங்களை அறிமுகப்படுத்தியுள் ளோம் முதலாவது இந்த பிரதேசங்களி லுள்ள உயிரினங்களைப் பாதுகாப்பதற் கான ஒரு திட்டமும் அடுத்தது ஒவ்வொரு மாணவருக்கும் இரண்டு மரக்கன்றுகள் வீதம் வழங்கி பாடசாலைகளில் தாவரங்களின் எண்ணிக்கையை அதிகரித்தல். பிரதேசத்தில் காணப்படுகின்ற அதி கூடிய பசளைகளைப்பாவிக்கும் முறையை தவிர்ப்பதற்கு கூட்டுப்பசளை தவிர்ப்பதற்கான செயற்பாடு ஒன்றையும் நாம் முன்னெடுத்து வருகிறோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

இயற்கையை நாம் பாதுகாத்தல் மட்டுமே அது நமக்கு சாதகமாக இருக்கும் இல்லையேல் அதுவே பாதகமாக அமைந்து பேரழிவைத் தேடித் தந்து விடும். எமது சூழலில் உள்ள இயற்கை வளங்களைப் பாதுகாப்பதில் ஒவ்வொருவருக்குமே பங்கு உண்டு என்பதை மறந்து விடக்கூடாது.

மீண்டும் வாழ்வோம் நிகழ்ச்சியானது சூரியன் எவ்.எம். வானொலியூடாக சனிக்கிழமைகளில் காலை 6 மணி முதல் 5 மணி வரையும் கிழக்கு மாகாணத்தில் பிறை எவ்.எம். வானொலியூடாக (F.M.102 Mhz) ஞாயிற்றுக் கிழமைகளில் பி.ப. 1.30 மணிமுதல் 2 மணிவரையும் புத்தளப்பிரதேசத்தின் அநுரர் எவ்.எம்.ஊடாக ஞாயிற்றுக் கிழமைகளில் மாலை 6.45 முதல் 7.15 மணிவரையும் எமது நிகழ்ச்சி ஒலிப்பதிவுகளை www.radio.voicesafpeace.lk என்ற இணையத்தளத்திலும் கேட்கலாம்.

## உங்கள் கதைகள்

மீண்டும் வாழ்வோம் வானொலி நிகழ்ச்சியில் உங்கள் கதைகள் இடம் பெற காத்திருக்கின்றன. ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் ஒலிபரப்பாகும் நாடகங்களின் தொகுப்பை மீண்டும் வாழ்வோம் பத்திரிகை வாயிலாகவும் உங்களுக்கு அறியத் தருகின்றோம். வடக்கு கிழக்குப் பகுதிகளிலிருந்து பல்வேறு காரணங்களால் இடம் பெயர்ந்து முகாம்களில் வாழும் மக்களின் மன நிலை குறித்து எடுத்துக்கூறும் வகையில் *இழப்புகள்* குறுநாடகம் அமைந்தது. குறுநாடகத்தின்தொகுப்பு கீழே தரப்படுகின்றது.

## இழப்புகள்



மீண்டும் வாழ்வோம் நிகழ்ச்சியின் உங்கள் கதைகள் பகுதியில் சமூகத்திற்கு விழிப் புணர்வை ஏற்படுத்த வேண்டிய விடயங்களை மக்களிடையே இலகுவாக சென்றடையக் கூடிய வகையில் குறுநாடகங்களை ஒலிபரப் புகின்றோம்.

இலங்கையில் நிலவும் யுத்த சூழ் நிலை காரணமாக இடம்பெயர்வுகளும் இழப்புகளும் தொடர்ந்த வண்ணமே தான் உள்ளன.

சொந்த நாட்டிற்குள்ளேயே அகதிகளாக வாழும் துர்ப்பாக்கிய நிலையில் எம் மக்கள் வாழ்கின்றார்கள். மறுபடியும் தமது சொந்த மண்ணிற்கு செல்ல முடியும் என்ற நம்பிக்கை பேச்சளவில் கூட எவரிடமும் இல்லை. பரம்பரை பரம்பரையாக வாழ்ந்த மண், உடன் பிறப்புகள், கூடி வாழ்ந்த சொந்தங்கள், உழைத்து சேர்த்த உடமைகள் எல்லாவற்றையும் இழந்து உண்ண உணவின்றி உடுக்க உடையின்றி அகதி என்ற பெயரில் முகம் தெரியாத மனிதர்களுடன் முகாம்களிலும் நலன்புரி நிலையங்களிலும் வாழ்பவர்களில் பலர் பேர் நடைப்பிணங்களாகத்தான் வாழ்கிறார்கள். தமது என்று சொல்வதற்கு எதுவுமின்றி எல்லாவற்றிற்கும் மற்றவர்களை எதிர்பார்த்து வாழ்கிறார்கள். அவர்கள் மனங்களில் ஏற்பட்டிருக்கும் காயங்கள், ஆறாத வடுக்கள் ஆகிவிடுகின்றன. இன்னும் சிலர் சொந்த நாட்டை விட்டு அகதிகள் என்ற பெயரில் வெளிநாடுகளில் புலம் பெயர்ந்து வாழ்கின்றார்கள்.

இந்தக்கதையில் வரும் பெரியவர் எல்லாவற்றையும் இழந்து தனது மகளுடன் அகதி முகாமில் வாழ்ந்து வருகிறார் .அவருக்கு ஏற்பட்ட இழப்புகளை அவரால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. நேரத்திற்கு சாப்பிடாமல் எவருடனும் போசாமல் மன வேதனையுடன் வாழ்க்கையில் பிடிப்பில்லாமல் இருக்கும் தந்தையைப்பார்த்து வேதனைப் படும் மகள் செல்வி அவருடைய இந்த நிலைமைக்கு காரணம் மனைவியின் இழப்பு, சொந்தங்களை பிரிந்து வாழ்கிறார். சொந்த மண்ணை விட்டு வேறு ஒரு இடத்தில் அகதியாக வாழ்கிறார். நடந்து முடிந்த கசப்பான அனுபவங்கள் அவரை தினம் தினம் வாட்டுகின்றன.

இவ்வாறான மன நிலையுடன் எத்தனையோ மனிதர்கள் வாழ்கிறார்கள் இவர்களுடன் பேசிப் பார்த்தால் தான் இழப்புகளின் பிரதிபலிப்பின் உண்மை நிலைமை மற்ற வர்களுக்கு விளங்கும். வயது வேறுபாடின்றி மனத்தாக்கங்களோடு வாழும் இம் மக்களுக்கு எவராலும் சமாதானம் கூற முடியாது. காரணம் மீளப்பெற்றுக்கொள்ள முடியாத வகையிலேயே இவர்களது இழப்புகள் காணப்படுகின்றன. இழப்புகளால் மனிதர்களுக்கு ஏற்படும் வலிகளை இழப்புகள் வசம் அகப்படாதவர்கள் உணர்ந்துகொள்ளவேண்டும் என்பதே இந்த கதையின் நோக்கமாகும்.

மீண்டும் வாழ்வோம் நிகழ்ச்சியில் உங்கள் கதைகள் பகுதிக்கு உங்கள் வாழ்க்கையில் இடம்பெற்ற சம்பவங்களை எழுதி அனுப்புங்கள் இவற்றை நாடக வடிவில் தொகுத்து உங்கள் கதைகளாக ஒலிபரப்ப காத்திருக்கின்றோம். உங்கள் கதைகள் மற்றவர்களுக்கும் படிப்பினையாக அமையும் என்பதே மீண்டும் ,வாழ்வோம் நிகழ்ச்சியின் எதிர்பார்ப்பாகும்.

## சுவடுகள்

☞ அரசாங்க அதிபர்களின் தகவல்களின் அடிப்படையில் திரட்டப்பட்ட IASC 144ஆவது அறிக்கையின்படி இலங்கையில் 55,600குடும்பங்களைச் சேர்ந்த 301,538பேர் அகதிகளாக இடம் பெயர்ந்த நிலையில் உள்ளனர்.

☞ வன்னியிலிருந்து சிறார்கள் வவுனியா நோக்கி இடம் பெயர்கின்ற போது அவர்களுக்குரியகல்வி நடவடிக்கை சுகாதாரம் மற்றும் ஏனைய அடிப்படை வசதிகளை எவ்வாறு செய்து கொடுப்பது தொடர்பாகUNICEF, வவுனியாஅரச செயலகம் வவுனியா மாவட்டத்தில் இருக்கின்ற அரச சாரா தொண்டு நிறுவனங்கள் உள்ளூர் தொண்ட நிறுவனங்களுக்கிடையில் வவுனியா அரச செயலகத்தின் கேட்போர் கூட மண்டபத்தில் கலந்துரையாடல் மேற்கொள்ளப் பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட அரச செயலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

☞ வலிகாமம் வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்திலிருந்து இடம் பெயர்ந்து கடந்த 18 வருடங்களுக்கு மேலாக அகதி களாக வாழும்குடும்பங்களை மீளக் குடியமர்த்துவதற்கான நடவடிக்கைகள் துரிதப்படுத் தப்பட்டிருக்கின்றன.

இதன்படி மீளக் குடியமர விரும்பும் குடும்பங்கள் தமது காணிகள் தொடர்பான உறுதிகளைப் பெற்றுக் கொள் வதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற் கொள்ளப்பட்டு வருகின்றன எனினும் அதிகளவிலான குடும்பங்கள் ஆவணங்கள் எதனையும் சமர்ப்பிக்க முடியாத நிலையில் உள்ளன. இடம் பெயர்வின் காரண மாக பலர் தமது ஆவணங்களைத் தவற விட்டிருப்பதாகக் கூறப்படுகிறது .

இந் நிலையில் இவர்களுக்கு ஆவ ணங்களைப் பெற்றுக் கொடுக்க இலவச உதவி சட்ட மையம் முன் வந்திருக்கின்றது இதற்கான அறிவித்தல்களை அம் மையம் பொது மக்களுக்கு ஊடகங்கள் மூலம் விடுத் திருக்கின்றது.

**உங்கள்எண்ணங்களை பகிர்ந்து கொள்ளுங்கள்**

மீண்டும் வாழ்வோம்
தொடர்பான உங்கள்
மேலான எண்ணங்களையும்
படைப்புகளையும் எதிர்பார்க்கிறோம்
நீங்கள் ஓவியம் வரையும் ஆற்றல் மிக்கவர் எனில்
உங்கள் அனுபவங்களை சித்தரிக்கும் ஓவியங்களை
வரைந்து எமக்கு அனுப்பி வையுங்கள்
அவற்றை மீண்டும் வாழ்வோம்
பகுதியில் பிரசுரிக்க காத்திருக்கிறோம்.

த.பெ.இல.1039 கொழும்பு
தொ.பே. -0774952242
மின்னஞ்சல்- info@lifeline srilanka.com

# மேலாதிக்க சிந்தனாவாதிகளால் சமாதானம் தகர்ந்து போயுள்ளது-ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ்

(கொழும்பு)

அரசாங்கத்திற்குள் இருக்கும் குறிப்பிட்ட தீவிர போக்கைக் கொண்டவர்களின் மேலாதிக்க கொள்கைகள் காரணமாக இலங்கையின் சமாதானத்திற்கான நம்பிக்கை தகர்ந்து போயுள்ளதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவுப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நாளிதழுக்கு செவ்வியளித்துள்ள அவர் அண்மையில் இராணுவத் தளபதி சரத்பென்சேகா வெளியிட்டுள்ள சிறுபான்மையினருக்கு எதிரான கருத்துக்கு மத்தியில் சிறுபான்மை கட்சிகளும் அவர்களுக்கு ஆதரவு வழங்கும் கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்படாதவிடத்து இலங்கையில் மீண்டும் ஜனநாயகத்தை கட்டியொழுப்புவது என்பது சாத்தியமற்ற விடயமாகிவிடும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் பொறுப்புள்ள மனிதாராகவுள்ள இராணுவத்தளபதி சிங்கள இனத்திற்கே இலங்கையின் உரிமை உள்ளது. ஏணைய சமூகங்கள் அவர்களுடன் சேர்ந்து வாழலாம் என்றும் அவர்கள் தேவையற்ற கோரிக்கைகளை முன் வைக்க முடியாது என்றும் தெரிவித்திருந்த கருத்து நாட்டின் முக்கிய பொறுப்பிலுள்ள ஒருவர் என்ற அடிப்படையில் பாராதூரமானது என ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் இராணுவத் தளபதியின் இந்த கருத்துக்கு அரசாங்கத்தரப்பிலும் வருத்தம் தெரிவிக்கப்படாமை வருந்தக் கூடிய செயல் என்றும் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.


இந்த கருத்து சிறுபான்மையினங்களின் அரசியல் கோரிக்கைகளை அடி மட்டப்படுத்தும் நடவடிக்கையாக கருத வேண்டியுள்ளதாக ஹக்கீம் குறிப்பிட்டுள்ளார்.

கிழக்கு மாகாண நிர்வாகம் தொடர்பாக கருத்துரைத்துள்ள ஹக்கீம் கிழக்கு முதலமைச்சர் பிள்ளையான் அரசியல் அனுபவமற்றவர் எனவே பிள்ளையானை சில அரசியல் வாதிகள் கைப்பொம்மையாகப் பயன்படுத்தி தங்களது அரசியல் அபிலாசை களை சூட்சகமாக நிறைவேற்றிக்கொள்ளும் ஓர் நிலைமை காணப்படுகின்றது. காத்தான் குடி நகர சபையின் தலை வரை பதவியிலிருந்து நீக்கியமையானது இதனை பறைசாற்றி நிற்கின்றது.

ஏனெனில் ஏற்கனவே காத்தான் குடி நகர சபை சிறந்த நிர்வாகத்தைக் கொண்ட சபையாக தெரிவுசெய்யப்பட்டுள்ளதை இங்கு சுட்டிக்காட்டலாம் என ரவுப் ஹக்கீம் தெரிவித் துள்ளார். கொழும்பில் தமிழர்களை பதிவு செய் யப்படும் நடவடிக்கையானது அவர்களை ஜனநாயக வழியிலிருந்துதிசை மாறாவே செய்யும் என்றும் ஹக் கீம் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கம் கிழக்கை விடுவித்த பின்னர் அங்கு மக்கள் சுதந்திரமாகச் செயற்படுவதர்கத் தெரிவிக்கின்ற போதும் அங்கு பெருமளவான தமிழர்கள் இன்னும் பயத்துடனேயே வாழ்ந்து வருகின்றனர்.

கிழக்கில் இருந்து தமிழீழ விடு தலைப்புலிகளை விரட்டியடித்து விட்டதாக தெரிவிக்கின்றபோதும் அவர்களின் நடமாட்டங்கள் தொடர்ந்தும் இருக்கின்றன என ஹக்கீம் தெரிவித்துள்ளார். தமிழ் பேசும் மக்களின் உரி



மைகள், இறைமை மீறப்பட்டமை காரணமாக ஏற்பட்டுள்ள நோயின் அறிகுறியே தமிழீழ விடுதலைப்புலிகளாகும். இந்த அறிகுறிக்கு உரிய மருந்துகள் வழங் கப்படாவிட்டால் அது பாரிய நோயாக மாறக் கூடும்.

இந்தநிலையில் போர் என்பது ஒரு முடிவு மாத்திரமே என்பதை அரசங்கம் உணர வேண்டும். அது நிரந்தர தீர்வாக அமைய மாட்டது என்றும் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார். (அ-6)

## கனேடிய சுங்க அதிகாரிகளுக்கு எதிராக இலங்கையர் உயர் நீதிமன்றத்தில் மனு

(கொழும்பு)

கனேடிய சுங்கப் பிரிவினருக்கு எதிராக இலங்கையர் ஒருவர் அந்நாட்டு உயர் நீதிமன்றத்தில் மனுவொன்றை தாக்கல் செய்துள்ளார். டொரன்டோவைச் சேர்ந்த தங்க நகை வர்த்தகரான கௌர்வகுமரன் செல்லதுரை என்ற இலங்கையரே கனேடியே சுங்கப் பிரிவினருக்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்துள்ளார்.

சுங்கப்பிரினரால் ஐந்து வருடங்களுக்கு முன்னர் குறித்த வர்த்தகரின் ஒருஇலட்சத்து 23 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் மதிப்புடைய ரொக்கப் பணத்தை பறிமுதல் செய்தமைக்கு எதிராக மனுத்தாக்கல் செய்துள்ளார்.

கடந்த ஐந்து ஆண்டுகளாக கனோடிய பெட்ரல் நீதிமன்றில் விசாரணை செய்யப்பட்டு வந்த வழக்கில் செல்லத்துரைக்கு எதிராக தீர்ப்பளிக்கப்பட்டது. இதனைத்தொடர்ந்து செல்லத்துரை சுங்கப்பிரிவினருக்கு எதிராக உயர் நீதிமன்றில் மேன்முறையீடு செய்துள்ளார்.

குறித்த வர்த்தகருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் தொடர்பு இருப்பதாக குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது. எனினும் வர்த்தகர் செல்லத்துரைக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் தொடர்பு இருந்தமைக்கான ஆதாரங்கள் இல்லை என கனேடிய பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (அ-6)

# இராணுவத் தளபதியின் கருத்து தொடர்பாக நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்த வேண்டும்

## சர்வகட்சிகள் கூட்டத்தில் தீர்மானம்

(கொழும்பு)

இலங்கை சிங்களவர்களுக்கு மாத்திரம் சொந்தம் என இராணு தளபதி சரத்பொன் சேகா தெரிவித்திருக்கும் கருத்துக்கு எதிராக நாடாளுமன்றத்தில் விவாதம் ஒன்று நடத்தக் கோருவது எனவும் அரசியல் அமைப்புக்கு எதிராக கருத்து தெரிவித்திருப்பது குறித்து சட்ட நடவடிக்கை எடுப்பது தொடர்பாக ஆராய்வது என நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற சர்வகட்சிகள் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

கொழும்பு முன்னாள் பிரதி மேயர் அஸாத் தலைமையில் அவரது பான்ஸ் பிளேஸ் அலுவலகத்தில் அரசியல் கட்சி பிரதிநிதிகளின் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மக்கள் பிரிவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மங்கள சமரவீர, மேலக மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன், முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவர் என்.எம்.அமீன், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உட்பட எட்டு அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். மேலும் இக் கூட்டத்தில் பல கட்சிகளின் பிரதிநிதிகள் கலந்து கொள்ள இருந்த போதிலும் தவிர்க்க முடியாத காரணத்தினால் கலந்துகொள்ள முடியாமல் போனதாக அறிவித்திருந்தனர். எனினும் கூட்டத்தில் எடுக்கப்படும் முடிவுகளுக்கு அக் கட்சிகள் தமது பூரண சம்மதத்தை தெரிவித்திருந்தாக கூட்ட ஏற்பாட்டளர் அஸாத் சாலி தெரிவித்தார். ஐக்கிய நாடுகள் சபையில் ஜனாதிபதி தமி ழிலும் ஆங்கிலத்திலும் உரையாற்றிய போது சிறுபான்மை மக்களுக்கு சகல உரிமைகள் இருப்பதாகவும் அவர்களுக்கு பாதுகாப்பு வழங்குவதாகவும் தெரிவித்திருந்தார். இந்த நிலையில் உயர் பதவி வகிக்கும் அரசாங்க அதிகாரி ஒருவர் அரசியல் அமைப்புக்கு எதிராக கருத்து தெரிவித் திருந்தமை குறித்து பல கட்சிகளின் பிரதிநிதிகள் தமது கண்ட னத்தை தெரிவித்தனர்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை சகல கட்சிகளுக்கும் அனுப்பி அடுத்த நடவடிக்கை எடுப்பது குறித்து பரிசீலிப்பது எனவும் அக்கூட்டத்தில் தீர்மானிக் கப்பட்டுள்ளது. இது தொடர்பான ஊடகவியலாளர் மாநாடு ஒன்று நாளை செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது. (அ-6)

# இந்தியா-இலங்கை புதிய ஒப்பந்தம்

(கொழும்பு)

அறிவியல் மற்றும் தகவல் தொழில் நுட்பத் துறையில் இணைந்து செயல்படுவது தொடர்பாக இந்தியாவும் இலங்கையும் புதிய ஒப்பந்ததில் கையெழுத்திட்டுள்ளன.

அதன்படி இரு நாட்டு விஞ்ஞானிகள், ஆராய்ச்சியாளர்கள் பங்கேற்கும் பயிற்சிப் பட்டறை மற்றும் கருத்தரங்குகள் நடத்தப்பட உள்ளன. இலங்கையின் இளம் விஞ்ஞானிகளுக்கு இந்தியாவில் பயிற்சி அளிக்கவும் இந்த ஒப்பந்தம் வழிவகை செய்கிறது.

டில்லியில் அண்மையில் நடைபெற்ற இரு நாட்டு பிரதிநிதிகள் கூட்டத்தில் ஒப்பந்தம் கையெழுத்தானதாகவும் 2013ஆம் ஆண்டு வரை ஒப்பந்தம் அமுலில் இருக்கும் என்றும் இலங்கை அரசு தெரிவித்துள்ளது. (அ-6)

# டக்ளஸ் தேவானந்தா -கருணா சந்திப்பு இணைந்து செயற்படுவது குறித்து ஆராய்வு

(கொழும்பு)

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் சமூக சேவைகள் மற்றும்



சமூக நலத் துறை அமைச்சரும் வட மாகாணத்தில் உள்ள விசேட செயலணியின் தலைவருமான டக்ளஸ் தேவானந்தாவுக்கும் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகளின் தலைவர் கருணா அம்மானுக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று அண்மையில் இடம் பெற்றுள்ளது.

பரஸ்பர நட்பு ரீதியிலான இச்சந்திப்பின் போது தற்போதைய அரசியல் நிலை வரங்கள் தொடர்பில் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

அத்துடன் பொதுவான வேலைத்திட்டங்களின் போது இரு கட்சியினரும் இணைந்து செயற்படுவதுகுறித்தும் அதேநேரம் ஏனைய ஜனநாயக சக்திகளை இனங்கண்டு அவற்றையும் பொதுவான வேலைத்திட்டங்களில் கலந்துகொள்ளச்செய்வது குறித்தும் இச் சந்திப்பின் போது விரிவாக ஆராயப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

மேற்படி சந்திப்பின் போது ஈழ மக்கள் ஜனநாயக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர் வீ.சிவானந்தராஜா, ஈ.பி.டி.பியின் மட்டக்களப்பு மாநாகரசபை உறுப்பினர் க.அருமைலிங்கம் ஆகியோரும் கலந்து கொண்டனர். (அ-6)

# போரில் காயமடைந்த படையினரை பார்வையிட்டு ஆறுதல் கூறிய ரவி கருணாநாயக்க

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுடனான போரில் காயமடைந்து சிகிச்சை பெற்று வரும் படையினரை எதிர்கட்சியான ஐக்கிய தேசிய கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான ரவி கருணாநாயக்க பார்வையிட்டு ஆறுதல் கூறியுள்ளார்.

கொழும்பு ஜயவர்த்தனபுர மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ள அதிகாரிகள் தரத்திலான படையினரை சனிக்கிழமை காலை பார்வையிட்ட ரவி கருணாநயாக்க போரில் பாடையினர் வெற்றி பெற்று வருவதற்கு பாராட்டு தெரிவித்துள்ளார்.

காயமடைந்த படையினருக்கு தேவையான பொருட்கள் சிலவற்றையும் கையளித்த அவர் மேலும் உதவிகளை ஐக்கிய தேசியகட்சி வழங்கும் எனவும் ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

தேசத்திற்காக போராடும் படையினருக்கு கட்சி வேறுபாடுகள் இன்றி உதவி புரிய வேண்டும் என்றும் தெரிவித்த ரவி கருணாநாயக்கபுலிகளுக்கு எதிரான போரில் படையி னர் பெற்று வரும் வெற்றியை அர சாங்கம் தமது அரசியலுக்கு பயன் படுத்துவதாகவும்குற்றம் சாட்டினார்.



அதேவேளை, போரில் காயமடைந்து அனுராதபுரம், பொலநறுவ ஆகிய மருத்துவ மனைகளில் சிகிச்சை பெற்று வரும் படையினரையும் ஐக்கிய தேசிய கட்சியின் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் பார்வையிட்டு வருகின்றனர்.

சிங்கள கிராமங்களில் படைக்கு ஆட் களை சேர்க்கும் நடவடிக்கைக்கு ஐக்கிய தேசிய கட்சியும் உதவி புரிந்த வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-5)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

2008ஆம் ஆண்டு நடைபெற்ற புலமைப் பரீசில் பரீட்சையில் 135 புள்ளிகளைப்பெற்று சித்தியடைந்த எமது நிலையத்தின் கல்விப் பொறுப்பாளரான க.இரவீந்திரனின் சிரேஷ்ட புத்திரன் செல்வன் **மதுஷனை** (ஜோன் பொஸ்கோ வித்தியாலய மாணவன்) பாராட்டி வாழ்த்துவதுடன் கல்வியில் இன்னும் பல சித்திகளை அடைய எல்லாம் வல்ல செல்லப் பிள்ளையார் துணைபுரிய வேண்டுகின் றோம்.



**வாழ்த்துவோர்**
**ஜனசக்தி சனசமூக நிலையத்தினர்.**

(1800)

*அரசடி வீதி, நல்லூர்*

எத்தனை கற்றாலும் எத்தனை படித்தாலும் பயன் இல்லை. ஒருவருக்கு வழிகாட்டும் குரு சரியாக அமையவில்லை என்றால்.

*– சுவாமி இராமதாசர்*

வலம்புரி

## எனது ஆசிரியர் எனக்கு முக்கியம் எனது மாணவன் எனக்கு முக்கியம்

ஒக்டோபர் ஆறாம் திகதி ஆசிரியர் தினம் கொண்டாடப்படுகின்றது. உலக ஆசிரியர் தினம் ஒக்டோபர் ஐந்தாம் திகதியாகவும் இலங்கையில் ஆசிரியர் தினம் ஒக்டோபர் ஆறாம் திகதியும் கொண்டாடப்பட்டு வருகின்றது.

ஆசிரியர் தினம் கொண்டாடப்படுவதன் தாற்பரியம் என்ன? என்பதற்கப்பால், ஆசிரியர்களின் சம கால கௌரவம் எவ்வாறு அமைந்துள்ளது என்பது இங்கு நோக்குதற்குரியது.

சம கால ஆசிரியர் கௌரவம் வீழ்ச்சி கண்டுள்ளது என்பது மறுக்க முடியாத உண்மை. இந்த உண்மையில் வகிபங்கு செலுத்தும் காரணங்களில் ஆசிரியர்களே முக்கிய இடத்தைப் பெறுகின்றனர் எனக் கூறுவோரும் இன்றைய நவீன தகவல் தொழில்நுட்பத்தின் விளைவாக மாணவர்களிடையே குருபக்தி இல்லாமல் போய்விட்டது எனக் கூறுவோரும் உளர்.

எதுவாயினும் ஆசிரியர் தினத்தில் ஆசிரியர்களின் கௌரவ விழுக்காடு பற்றிய சிந்தனை தேவையாகவே இருக்கின்றது. உண்மையில் ஆசிரியர்கள் மாணவர்களைத் திருப்திப்படுத்துவதற்கு மாறாகக் கல்விப்புலம் சார்ந்த உயரதிகாரிகளைத் திருப்திப்படுத்த முற்படுகின்றனர்.

அதாவது தம்மை மேற்பார்வை செய்யும் அதிகாரிகளுக்குப் பதிவுக்கோல்வகைளைக் காட்டி கையொப்பம் பெற்று விட்டால் அதுவே நல்லாசிரியருக்கான இலட்சணம் என ஆசிரியர்களில் பெரும்பாலானவர்கள் கருதுகின்றனர்.

இவ்விதம் தமது உயரதிகாரிகளைப் பந்தா பண்ணுவதில் ஆசிரியர்கள் அக்கறையாக இருக்கின்றார்களே தவிர, தம்முடனான உறவில் அவர்கள் கரிசினை காட்டவில்லை என்பதை மாணவர்கள் கண்டு கொள்கின்றனர்.

இதற்கு மேலாக இருபது வருடங்கள் ஆசிரியர் தொழில் புரியும் ஒருவரை இளம் ஆசிரிய ஆலோசகர் ஒருவர் வகுப்பறையில் இருந்து புள்ளியிடுகின்றார்.

அப்படியாயின் மாணவர்கள் தனக்குக் கற்பிக்கும் ஆசிரியர் பற்றி என்ன நினைப்பார்கள் என்பதை ஒருகணம் சிந்தித்தாக வேண்டும்.

இருபது வருடங்கள் கற்பிக்கும் ஆசிரியரின் கற்பித்தல் முறை பற்றி ஆராய வேண்டுமாயின், சக ஆசிரியர்களை மாணவர்களாகப் பயன்படுத்தி குறித்த ஒரு அலகைக் கற்பித்தல் உபகரணங்களைப் பயன்படுத்தி கற்பிக்கும் நுட்பத்தை மதிப்பிட்டுக் கொள்ளலாம்.

இந்த மதிப்பீட்டுப் பணியில் வளவாளர்களாக மூன்றுக்கு மேற்பட்டவர்கள் இருக்கலாம். இதற்கு மேலாகப் பட்டப்பின் கல்வி டிப்ளோமா பாட விதானங்களும் ஆசிரியர்–மாணவர் உறவை விரிசலடைய வைக்கின்றது.

குறிப்பாக பிளேட்டோ, ரூஸோ, காந்தி போன்றவர்களை மனனம் செய்யும் ஆசிரியர்களுக்கு தங்கள் வகுப்பிலிருக்கும் எங்களைப் பற்றித் தெரியாமல் இருக்கின்றது என்பதே மாணவர்களின் ஆதங்கம்.

பிளேட்டோவைத் தெரியும். ரூஸோவைத் தெரியும். ஆனால் தனது வகுப்பிலுள்ள பார்த்தீபன் என்ற மாணவனுக்குத் தாயும் இல்லை; தந்தையும் இல்லை என்ற செய்தி ஆசிரியருக்குத் தெரியாது. இந்த இடத்திலேயே ஆசிரியர்–மாணவர் உறவு தடைப்படுகின்றது.

ஆக எனது ஆசிரியர் எனக்கு முக்கியமானவர் என்பது போல, எனது மாணவர் எனக்கு முக்கியம் என்ற எண்ணக்கரு எங்கள் ஆசிரிய தெய்வங்களிடம் எழ வேண்டும். அதுவே தேவை.

# "எனது ஆசிரியர் எனக்கு முக்கியமானவர்"

## ஆசிரியர் தினக் கட்டுரை

மனிதன் மண்ணில் நல்ல வண்ணம் வாழ வழிகாட்டுபவர்களுள் குரு முதன்மையானவர் .தமிழ் மொழியின் கல்வி வரலாறு தொன்மையானதாகவும் குரு குலம் சார்ந்ததாகவும் காணப்படுகிறது.

மாணவரிடையே கல்வி எனும் பயிரை களை நீக்கி வளர்த்தெடுக்கத் தம் உடல், பொருள், உழைப்பு அனைத்தையும் அர்ப்பணித்து தன்னை நாடி வந்தவர்களுக்கு *அகரம்* காட்டுபவர்கள் ஆசிரியர்களே. அறிவுப் பசியோடு வருபவர்க்கு விருந்தாக அமைபவர்களும் அவர்களே.

இன்றைய உலகில் மனிதனை மனிதனாக்கும் கல்வியே தேவையாகும். இதனை உணர்ந்த சுவாமி விவேகானந்தர் அன்று கூறிய கருத்து,

**எத்தகைய கல்வி ஒழுக்கத்தை உருவாக்குமோ**
**மனவலிமையை வளர்க்கச் செய்யுமோ விரிந்த**
**அறிவைத் தருமோ ஒருவனை தன்னுடைய**
**சுய வலிமையைக் கொண்டு நிற்கச் செய்யுமோ**
**அத்தகைய கல்வி தான் நமக்குத் தேவை.**

இன்றைய எமது நாட்டிற்குத் தேவையானதாகும்.

***எனது ஆசிரியர் எனக்கு முக்கியமானவர்*** எனும் தலைப்பானது இவ் வருடத்தின் ஆசிரியர் தினத்திற்கான தொனிப் பொருளாக அமைகிறது. இதனை சர்வதேச கல்வியகமும் ஐக்கிய நாடுகள்கல்வி விஞ்ஞான கலாசார அமையமும் இணைந்து வெளியிட்டுள்ளன.

இத் தொனிப் பொருளானது மாணவர் சார்பாக ஆசிரிய மாணவர் உறவின் வெளிப்பாடாக அமைகிறது. ஆறு வயது முதல் அறுபது வயது வரை அனைவரையும் ஒரு கணம் நின்று சிந்திக்க தூண்டுவதாக உள்ளது.

உறவின் உள ரீதியான அன்னியோன்னியத்தை விளக்குகிறது. மாணவர் ஒவ்வொருவரும் ஆசிரியரைப் பற்றிக் கூறும் போது "என்ர ரீச்சர்", "எங்கட ஆசிரியர்" என என்னுடையது எனும் உரிமையில் விளித்து கூறுகையில் அது தனக்கே உரியது என்பதை காட்டுகிறது. எனது ஆசிரியர் என்பதில் உறவின் மேம்பட்ட நிலையை காட்டுகிறது. ஒவ்வொரு மாணவனது வளர்ச்சிப் படிகளிலும் ஆசிரியரின் வகிபங்கினையும் முக்கியத்துவத்தையும் காண முடிகிறது.

இன்றைய எமது சூழலில் நண்பர்கள் எனும் ரீதியில் நட்புரிமையுடன் ஆசிரியர் பழகுவதையே மாணவ சமுதாயம் விரும்புகிறது.

கல்வியை மட்டும் புகட்டுவது ஆசிரிய தொழிலன்று. ஒவ்வொரு மாணவனது மனங்களையும் தெரிந்து கொள்ளுதல் அவசியமானதாகும்.

***இருளிலிருந்து ஒளிக்கு இட்டுச் செல்வது கல்வி*** எனும் நிலை கல்வியை கற்பிக்கும் ஆசிரியர்கள் அக இருளில் இருந்து மாணவர்களை ஒளிக்கு இட்டுச் செல்ல வேண்டும்.

உள விருத்தி நிலைகள் , நடத்தை , நடத்தை மாற்றங்கள் போன்றவற்றை புலன் அனுபவத்தால் அறியக்கூடியதாக இருப்பினும் தேடல், மன எழுச்சி, உளம் சார் உணர்வுகளை புரிந்து கொள்ளல் அவசியம். மாணவன் ஒருவரின் நம்பிக்கைக்கு பாத்திரமானவராக ஆசிரியர் இருத்தல் வேண்டும். இதுவே ஆசிரிய மாணவ உறவின் மேம்பட்ட நிலைக்கு சான்றாகிறது.

இவ் வாண்டில் ஆசிரியர் தினத்தெனிப் பொருள் மாணவர்க்ளது உளம் சார்பான வெளிப்பாடாக அமைகிறது எனலாம்.

**பிரகாசினி கருணாநிதி**
**4ஆம் வருடம்**
**யாழ்பல்கலைக்கழகம்**

## கிராமத்து கலைக்கூடத்தின் சாதனைக் குழந்தை பாசுபதன்

"ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சை"
துள்ளிப் படிக்கின்ற பள்ளிக் குழந்தைகளுக்கு
சுகமானதா? சுமையானதா?
அல்லது
சுகமான சுமையாகுமா? என்று
கல்வியுலகம் ஆராய்கின்ற நிலையில்
சோதனையை சாதனையாக்கி
வெற்றி கண்டுள்ளான்
"எங்கள் தமிழ்க் குழந்தை பாசுபதன்"

கல்வியுலகில் என்றும் தளம்பாத நிறைகுடமாய்
வளர்ந்துவரும் கலைத்தாயாம்
"மீசாலை வீரசிங்கம்" என்ற வெற்றிச் சிங்கத்தின்
நெற்றியில்
மீண்டும் ஓர் "வெற்றித்திலகம்" இட்டு
கலைத்தாயின் "பெரும் புகழை"
ஆனையிறவிற்கு அப்பால்
அம்பாந்தோட்டை வரை மட்டும் அல்ல
அகிலம் முழுவதற்கே கொண்டு சென்றுள்ளான்
கிராமத்துக் குழந்தை பாசுபதன்

"கிராமத்துக் கலைக் கூடங்கள்
நகரப்புறப் பாடசாலைகளுக்கு
எந்த வகையிலும் சளைத்தவை அல்ல"
என்பதை மீண்டும் உறுதிப்படுத்தியிருக்கும்
எங்கள்வெற்றிக் குழந்தை பாசுபதனே.

*வடகோவை சிவநேசராசன்*

## அகிலம் போற்றிடும் 'ஆசிரியர் தினம்'

அகிலம் போற்றுமெம் 'ஆசிரியர் தினம்'
அணிசெய் பொன்னாள் அற்புதத் திருநாள்
சகிப்போடு எம்பணி சரிவரச் செய்வதால்
சமன் செய் கோலைச் சீர் தூக்கும் நம்நாள்
மகிழ்வும் மன நிறைவும் மாணவர் மத்தியில்
மங்காது உயர்வுற மனமார் பணிபுரிவோம்
அகிலம் வாழ்த்தும் 'ஆசிரியர் தினத்தை'
அனைவரும் ஆராதித்து அதன்புகழ் பாடுவோம்!

*டானியல் தேவமதுரம்*

## அறிவொளிக்கு

குருவருள் வேண்டிக் கும்பிடுவோம்
குறைவிலாதறிவைப் பெற்றிடவே!
திருவருள் தரும் இறைவனுக்கு நிகராய்
பக்தியாய் பணிவாய் போற்றிடுவோம்!
இருள்தனையகற்றும் அறிவொளிக்கு
நிகராய் ஏது உண்டு இவ்வையத்துள்
பொருள் இன்பம் வீடு பயனாய்
வந்திடும் உய்வு பெற்றிடவே !!!

*இராம ஜெயபாலன் –கொக்குவில்*

## சமுதாய ஏணி

வாழ்க வாழ்க வாழிய ஆசிரியர்
வாழ்க வாழ்க வாழிய ஆசிரியம்
வாழ்க வாழ்க வாழிய குருசேவை சேவை
வாழ்கவே பல்லாண்டு வாழ்க என்றுபோற்றுவோம்.

எழுத்துக்களை அறிவிக்கும் சமுதாய ஏணி
எவரையும் கரை சேர்க்கின்ற உபகாரத் தோணி
அழுத்தமாகப் பதிப்பவனாம் அவனே அச்சாணி
ஆனந்த வாழ்வுதரும் சமூக விஞ்ஞானி

அள்ள அள்ள ஊறிவரும் ஆனந்தக்கேணி
ஆளுமையாய் மாணவனை வளர்க்கின்ற ஞானி
மெல்ல மெல்லக் கற்பவர்க்கும் உதவுகின்ற பாணி
மேலான பணியென்று நாம் பணிவோம் தாள்

*கே.எஸ்.சிவஞானராஜா*

## ஆசிரியர் தினவிழா

(யாழ்ப்பாணம்)

நல்லூர் இந்து தமிழ் பெண்கள் பாடசாலையின் (மங்கையர்க்கரசி வித்தியா லயம்) ஆசிரியர் தினவிழா இன்று திங்கட் கிழமை சிரேஷ்ட மாணவ முதல்வன் ஜெ. ஸ்ரீக்குமரன் தலைமையில் பாடசாலை பிரார்த்தனை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மாணவ முதல்வர் சபையினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் இந்நிகழ்வில் மாணவர் கலைத்திறன் செயற்பாடுகளும், ஆசிரியர் கௌரவிப்பும் நடைபெறவுள்ளது.

(அ)

## சுவாமி விவேகானந்தரின் ஆளுமை வளர்ச்சி
### சிற்றின்பம் வாழ்க்கையின் இலட்சியம் அல்ல



புலன் இன்பம் மனித.குலத்தின் குறிக்கோள் அல்ல, அறிவு தான் (ஞானம்) வாழ்க்கையின் இலட்சியம். மிருகம், புலன்களின் மூலம் இன்புறுவுதைவிட மனிதன் அறிவின் மூலம் அதிகம் இன்புறுவதை நாம் காண்கிறோம்.

மனிதன் தன் அறிவு இயல்பில் இன்புறுவதை விட ஆன்மீக இயல்பில் அதிகம் இன்புறுகிறான். ஆகவே மிக உயர்ந்த அறிவு ஆன்மீக அறிவாகத் தான் இருக்க வேண்டும். இந்த அறிவின் காரணமாக பேரின்பம் விளைகின்றது. இந்த உலகின் பொருட்கள் எல்லாம் அந்த உண்மை அறிவு மற்றும் பேரின்பத்தின் நிழல்கள். அவற்றின் மூன்றாம் தரமான அல்லது 4ஆம் தரமான வெளிப்பாடுகள் மட்டுமே. முட்டாள்கள் தான் புலன் இன்பங்களை நாடி ஓடுகிறார்கள். புலன் இன்பங்களில் உழல்வது எளிது. உண்பது, உறங்குவது என்ற பழைய பாதையி லேயே செல்வது எளிது. நவீன தத்துவ வாதிகளின் கருத்து என்ன? புலன்களின் திருப்திக்கு காரணமான கருத்துக்களைக் கூறி அதற்கு மதம் என்ற முத்திரை குத்துவதுதான். இது ஆபத்தானது. புலன் வழிச் செல்லும் வாழ்வில் மரணம் தான் இருக்கிறது. ஆன்ம நிலை பெற்றுவாழ்வதே வாழ்க்கை. வேறு எந்த விதமான வாழ்க்கையும் மரணமே. வாழ்க்கை முழுவதுமே ஓர் உடற் பயிற்சிக்கூடம் எனலாம். உண்மையான வாழ்வை அனுபவிக்க வேண்டுமானால் இதைக்கடந்து அப்பால் செல்ல வேண்டும்.

# குரல் மற்றும் உச்சரிப்பு பயிற்சியாளர் பயிற்சி

தற்போது சிறப்பான வளர்ச்சியைப் பெற்றுள்ள பி.பி.ஓ. துறையானது குரல் மற்றும் உச்சரிப்பு பயிற்சியாளர்களுக்கு அபரிமிதமான வாய்ப்புகளை வழங்கி வருகிறது. திறமைமிக்க தகவல் தொடர்பாளர்கள், இளம் பி.பி.ஓ. துறையினருடன், தங்களது திறமையைப் பகிர்ந்துகொள்வதால் அதன் மூலமாக நல்ல வருமானம் ஈட்டும் வழிகளும் ஏராளம் உள்ளன. தொடர்ந்து பல துறைகளைச் சேர்ந்த பல நிறுவனங்களும், தங்களது செயல்பாடுகளையும்,சேவையையும் அவுட் சோர்சிங் செய்து வருவதால், பி.பி.ஓ. துறை அசுர வளர்ச்சியைப் பெற்றுள்ளது. பி.பி.ஓ. துறைக்கான முக்கிய அங்கமான குரல் வளம் மற்றும் உச்சரிப்பு பயிற்சி ஆகியவை விளங்குகின்றன.

இதனால், ஒருவர் நன்றாகப் பேசும் திறமையை வளர்த்துக்கொள்வதால் குரல் மற்றும் உச்சரிப்பு துறையில் பயிற்சியாளராக மாற்றிக்கொள்ள முடியும். குரல் மற்றும் உச்சரிப்பு பயிற்சியாளர்கள் நமது குரலை உலகெங்கும் ஒலிக்கச் செய்யும் சக்தி படைத்தவர்களாக இருக்கின்றனர். இவர்கள் இளம் பயிற்சியாளர்களுக்கு பேச்சுத் திறமைகளை பெறுவதற்கான சிறப்பு பயிற்சியை தருகிறார்கள். ஒரு பேச்சின் போது எங்கு நிறுத்துவது, பேச்சு செல்லும் திசையை கட்டுப்படுத்துவது போன்ற பேச்சுக் கலைநுட்பங்களை இவர்கள் தெளிவாக விளக்குகிறார்கள்.பேச்சு மற்றும் உச்சரிப்பு பயிற்சியாளராக ஒருவர் உருவாக இதற்கான கல்வித் தகுதிகள் நிர்ணயிக்கப்படவில்லை.

எனினும்,பட்டப்படிப்பு ஒன்றில் தேர்ச்சி என்பது தேவைப்படுகின்றது.ஆங்கில இலக்கியத்தில் பட்டம் பெற்றிருப்பவருக்கு முன்னுரிமை தரப்படுகிறது. இந்தத் துறையில் பணியாற்ற துறைசார்ந்த ஈடுபாடு அவசியம். பின்பு,பி.பி.ஓ. வின் எந்தப் பிரி வில் பணியாற்ற இருக்கிறோம் என் பதை பொறுத்து திறமைகள் தேவைப்படுகின் றன. ஆங்கிலத்தில் பொதுவான ஈடுபாடு, ஆழ்ந்த ஆங்கில இலக் கண அறிவு, பயிற் சிக் காலத்தில் தரப் படும் விமர்சனங் களை ஏற்றுக் கொள்ளும் பக்குவம் ஆகியவை நமக்கு அவசியம் தேவை.

நம்மிடம் ஏற் கனவே உள்ள திறமைகளை மெருகூட்டுவதே பேச்சு மற்றும் உச்சரிப்பு பயிற்சி யாளர்களின் பணி யாக அமைகிறது. தகவல் தொடர் புத் திறனை வளர்ப்பது, வாடிக் கை யாளர்களின் தன்மையை அறிவது , கவனித்தலின் அவசியம், குரலில் தேவைக்கேற்ப ஏற்ற இறக்கங்களை பயன்படுத்துவது மற்றும் மென்திறன்கள் போன்ற பிரிவுகளில் இந்தப் பயிற்சியாளர்கள் நமமை செப்பனிடுகின்றனர்.



இலக்கணம், உச்சரிப்பு, வார்த்தைகளில் உச்சரிப்பு, பரவலான வார்த்தைப் பிரயோகம், சரளமான நடை ஆகியவற்றில் நாம் ஆர்வம் கொண்டிருந்தால் இதில் மிளிருவது எளிது.

பி.பி.ஓ.க்கள் தொடங்கப்பட்ட காலத்தில் இத் துறையில் அமெரிக்கா மற்றும் பிரித்தானிய ஆங்கிலம் தான் ஏற்றுக்கொள்ளப்பட்டு வந்தது. ஆனால், தற்போது அந்தந்த நாட்டு ஆங்கில நடையே போதுமானதாக இருக்கிறது.

எளிதாக மற்றவர்களிடம் பழகும் தன்மை, ஆக்கபூர்வமாக யோசிக்கும் திறன் ஆகிய குணங்களும் இத்துறையில் நுழைய விரும்புவர்களுக்கு தேவைப்படுகிறது. பொதுவாக, இத்துறையில் நுழைபவருக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. 4 முதல் 12 வாரங்கள் வரையிலான பயிற்சியாக இது அமைகிறது. பல்வேறு கலாசாரங்கள் பற்றிய அடிப்படைகள் , உச்சரிக்கும் விதம், அந்தந்த நாட்டு வாடிக்



கையாளர் தேவை, முகாமைத்துவ திறன்கள் மற்றும் கால்சென்டர் அடிப்படைகள் ஆகிய வற்றில் பயிற்சி தரப்படுகிறது.

பல நிறுவனங்களில் குரல் மற்றும் உச்சரிப்பு பயிற்சியாளருக்கான தேவை இருந்து வருகிறது.

மேலும், பல கோர்ப்பரேட் நிறுவனங்கள், விமான நிறுவனங்கள் ,ரீடெயில் நிறுவனங்கள் ஆகியவற்றிலும் இவர்களுக்கான வாய்ப்புகள் தற்போது அதிகமாக உருவாகி வருகின்றன.

இத்துறையில், புதியதாக பணி யில் சேருவோருக்கு தொடக்கத்திலேயே நல்ல ஊதியம் கிடைக்கிறது. பின்னர், படிப்படியாக ஊதியம் அதிகரிக்கப்படுகிறது.

அன்பார்ந்த

அதிபர்களே, ஆசிரியர்களே, மாணவர்களே!

உங்கள் அபிமானத்திற்குரிய வலம்புரியில்

**நாளை முதல்...**

**வடக்கு மாகாணக் கல்வி அமைச்சினால் தயாரிக்கப்படும்**


★ க.பொ.த (சா/த) மாதிரி வினாத்தாள் (இதுவரை வெளி வராத புதிய பாடத் திட்டம்)

★ க.பொ.த (உயர் தர) மாதிரி வினாத்தாள். (ஒவ்வொரு பாடத்திலும் அலகு ரீதியான விளக்க்ங்களுடன்)

★ 5ஆம் தரப் புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் என்பன வெளி வரும்.

குறிப்பு:- க.பொ.த (சா/த) கணிதம் -I நாளை வெளிவரும். பிரதிகள் தேவைப்படும் பாடசாலை அதிபர்கள் வலம்புரி நிர்வாகத்துடன் தொடர்பு கொள்ளவும்.











உலக ஆசிரியர் தினத்தை முன்னிட்டு யாழ். கல்வி வலயத்திற்குட்பட்ட ஆசிரியர்களை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று யாழ்.இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வுகளின் காட்சிகள் சில...

# யாழ்.மாவட்ட விளையாட்டுப் போட்டியில் தெல்லிப்பழை பிரதேச செயலகம் சம்பியன்






(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டியில் தெல்லிப்பழை பிரதேச செயலகம் 61 புள்ளிகளைப் பெற்று மாவட்ட சம்பியன் ஆனது.

2008 ஆம் ஆண்டுக்கான பிரதேச செயலகங்களுக்கிடையிலான யாழ்.மாவட்ட விளையாட்டுப் போட்டியில் தடகளப் போட்டிகள் நேற்று முன்தினம் ஆரம்பமானது.

கடந்த இரு தினங்கள் நடைபெற்ற யாழ். மாவட்ட தடகளப் போட்டிகளின் முடிபில் நேற்று மாலை பரிசளிப்பு விழா நடைபெற்றது. இதில் இம் முறை யாழ்.மாவட்ட சம்பியனாகத் தெல்லிப்பழை பிரதேச செயலகம் தெரிவானது.

யாழ்.மாவட்ட விளையாட்டுப் போட்டியில் தெல்லிப்பழை பிரதேச செயலகம் 61 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தையும் பருத்தித்துறைப் பிரதேச செயலகம் 34 புள்ளிகளைப்பெற்று 2 ஆம் இடத்தையும் பெற்றது.

கரவெட்டி பிரதேச செயலகம் 31 புள்ளிகளையும் கோப்பாய் 27 புள்ளிகளையும் சங்கானை 20 புள்ளிகளையும் பெற்று முதல் 5 இடங்களுக்குள் முன்னேறின. (5)

## 800 மீற்றர் ஓட்டத்தில் நேசரூபன் முதலிடம்

### புதிய சாதனையும் படைத்தார்




(யாழ்ப்பாணம்)

பிரதேச செயலகங்களுக்கிடையிலான யாழ்.மாவட்ட விளையாட்டுப் போட்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆண்களுக்கான 800 மீற்றர் ஓட்டத்தில் நல்லூர்ப் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த பி.நேசரூபன் முதலாம் இடத்தைப் பிடித்து புதிய சாதனை படைத்தார்.

இவர் 800 மீற்றர் தூரத்தை 02:04:10 நிமிடங்களில் ஓடி முடித்து இப் புதிய சாதனையைப் படைத்துள்ளார். இதற்கு முன்னர் 2004 ஆம் ஆண்டு யாழ்.மாவட்ட விளையாட்டுப் போட்டியில் யாழ்ப்பாணப் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த ஜெ.ஜெயதாஸ் 800 மீற்றர் தூரத்தை02:05: 08 நிமிடங்களில் ஓடி முடித்து சாதனை படைத்திருந்தார்.

இச் சாதனையையே பி.நேசரூபன் நேற்று முன்தினம் முறியடித்துள்ளார். (5,27)

## ஐயாயிரம் மீற்றர் ஓட்டத்தில் நவரத்தினம் மேஷி புதிய சாதனை



பிரதேச செயலகங்களுக்கிடையிலான யாழ்.மாவட்ட விளையாட்டுப் போட்டியில் நேற்று நடைபெற்ற பெண்களுக்கான 5 ஆயிரம் மீற்றர் ஓட்டப் போட்டியில் சண்டிலிப்பாய் பிரதேச .செயலகப் பிரிவைச் சேர்ந்த நவரட்ணம் மேஷி முதலாம் இடத்தைப் பெற்று புதிய சாதனை படைத்துள்ளார்.

இவர் 5 ஆயிரம் மீற்றர் தூரத்தை 20: 45:01 நிமிடத்தில் ஓடி முடித்து புதிய சாதனையைப் படைத்துள்ளார். இதற்கு முன்னர் கடந்த 2005 ஆம் ஆண்டு நடைபெற்ற பிரதேச செயலகங்களுக்கிடையிலான யாழ். மாவட்ட விளையாட்டுப் போட்டியில் சாவகச்சேரி பிரதேச செயலகத்தைச் சேர்ந்த இ.அனுஷியா 5 ஆயிரம் மீற்றர் தூரத்தை 20:57:01 நிமிடங்களில் .ஓடி முடித்தமையே சாதனையாக இருந்தது.

மானிப்பாய் மகளிர் கல்லூரி மாணவியான நவரத்தினம் மேஷி 2000 ஆம் ஆண்டு முதல் (12 வயதிலிருந்து) தடகளப் போட்டிகளில் சாதனை படைத்து வருவதாக அவரை ஆரம்ப காலம் முதல் பயிற்றுவித்து வரும் இ.தியாகராஜா தெரிவித்தார்.

இதுவரையில் 2000 ஆம் ஆண்டு மாத்தளையில் நடைபெற்ற சமாதான விளையாட்டுப் போட்டியில் 5 ஆயிரம் மீற்றர் ஓட்டத்தில் 2 ஆம் இடத்தையும் 10 ஆயிரம் மீற்றர் ஓட்டத்தில் முதலாம் இடத்தையும் பெற்றுள்ளார்.

அத்துடன் 2003 ஆம் ஆண்டு நடைபெற்ற மாவட்ட விளையாட்டுப் போட்டியில் 10 ஆயிரம் மீற்றர் ஓட்டத்தில் 10 வருட சாதனையை முறியடித்து புதிய சாதனை படைத்தார்.

கடந்த 2004 ஆம் ஆண்டு நடைபெற்ற யாழ்.மாவட்ட விளையாட்டுப் போட்டியில் பெண்களுக்கான ஆயிரத்து 500 மீற்றர் ஓட்டத்தில் 20 வருட சாதனையை முறியடித்துப் புதிய சாதனை படைத்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (5,27)

## தேசிய மட்டப் போட்டியில் வெற்றியீட்டிய யாழ்.மாணவர்களைக் கௌரவிக்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

தேசிய மட்டப் பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டியில் வெற்றியீட்டிய யாழ்ப்பாணப் பாடசாலை மாணவர்களைக் கௌரவிக்கும் விழா இம் மாதம் 25 ஆம் திகதி யாழ்.இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தேசிய மட்ட விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்று யாழ்.மாவட்டத்திற்குப் பெருமை சேர்த்த எமது மாணவர்களை கௌரவிக்க வேண்டும் என யாழ்.அரச அதிபர் க. கணேஷ் கேட்டுக் கொண்டமைக்கு அமைவாக இவ் விழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக யாழ்.கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் (உடற்கல்வி) எஸ்.குமாரசாமி தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட விளையாட்டுப் போட்டியில் நேற்று சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந் நிகழ்வு தொடர்பில் யாழ்ப்பாணக் கல்வி நிர்வாகமும் யாழ்.மாவட்ட செயலகத்திற்கும் இடையே இவ்வாரத்தில் கூட்டம் ஒன்று நடைபெறவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## சிறந்த மைதானம் அவசியம்

### யாழ்.விளையாட்டுத்துறை அதிகாரி கோரிக்கை


(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட விளையாட்டுப் வீர, வீராங்கனைகள் பயிற்சிகளை மேற்கொள்ள சகல வசதிகளுடன் கூடிய மைதானம் ஒன்று அமைக்கப்பட வேண்டும் என யாழ்.மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரி திருமதி எ.எவ். ஜே. ரூபசிங்கம் கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ்.மாவட்ட விளையாட்டுப் போட்டியில் நேற்று நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் நன்றியுரை ஆற்றிய அவர் இதனை பிரதம விருந்தினராகக் கலந்து தொண்ட யாழ்.அரச அதிபர் க.கணேஷ், கௌரவ விருந்தினராகக் கலந்து கொண்ட வடக்கு மாகாண விளையாட்டுத் துறை உதவிப் பணிப்பாளர் எஸ்.அண்ணாத் துரை ஆகியோரிடம் விடுத்தார். குறிப்பாக யாழ்ப்பாண துரையப்பா விளையாட்டரங்கை சிறந்த மைதானமாக மாற்ற வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார்.







யாழ்.மாவட்ட விளையாட்டுப் போட்டியில் நேற்று நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் சிறப்பு விருந்தினர், யாழ்.கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் (உடற்கல்வி) எஸ்.குமாரசாமி உரையாற்றுவதை முதலாவது படத்திலும் வெற்றியீட்டிய வீர, வீராங்கனைகளுக்கு விருந்தினர்கள் வெற்றிக் கிண்ணம் வழங்கி கௌரவிப்பதை அடுத்து வரும் படங்களிலும் காணலாம்.

மாநகர சபை, யாழ்ப்பாணம்



# வன்னிக்கான தபால் சேவைகள் மூன்று வாரங்களாக துண்டிப்பு

(கிளிநொச்சி)

முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களுக்கான தபால் சேவைகள் கடந்த 3 வாரங்களாகத் துண்டிக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

வவுனியா அஞ்சல் அலுவலகத்திலிருந்து அஞ்சல் திணைக்கள வான் மூலமாக கிளிநொச்சிக்கு அனுப்பப்பட்டு, அங்கிருந்து முல்லைத்தீவுக்கு வேறுவாகனத்தில் தபால்கள் அனுப்பப்பட்டு வந்தன.

அண்மைக்காலமாக ஏ-9 வீதியில் மாங்குளத்திற்கும், கிளிநொச்சிக்கும் இடையில் ஏற்பட்டுள்ள தீவிர மோதல் நிலைமைகள், தாக்குதல் அபாயம் காரணமாக இந்த வீதி வழியாக அஞ்சல் சேவையை நடத்துவதில் ஆபத்து நிலை தோன்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. இந்த நிலைமையையடுத்தே, வவுனியாவுக்கும், கிளிநொச்சிக்கும் இடையிலான அஞ்சல் சேவைகள் பாதிக்கப் பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது வன்னிப்பிரதேசத்தில் மனிதாபிமான சேவைகள் தொடர்பில் நிலவுகின்ற நெருக்கடியான சூழ்நிலையில் வெளிமாவட்டங்களுடன் குறிப்பாக கொழும்பில் உள்ள அரசு உயரதிகாரிகள், அமைச்சுக்கள், அரசு உயர்மட்டத்தினர் ஆகியோருடன் கடிதத் தொடர்புகளை ஏற்படுத்த முடியாது நிலைமை ஏற்பட்டிருப்பதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

(எ-5)

# ஜனாதிபதி ஆலோசகர் பதவியிலிருந்து வாசுதேவ நாணயக்கார நீக்கப்படவுள்ளார்

(கொழும்பு)

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் கொழும்பு மாநகரசபையின் எதிர்க்கட்சித் தலைவரும்இடதுசாரி முன்னணியின் தலைவருமான வாசுதேவ நாணயக்காரவை ஜனாதிபதி ஆலோசகர் பதவியிலிருந்து நீக்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அரசாங்கத்துக்கு எதிராக அண்மையில் உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுவொன்றை தாக்கல் செய்தமையைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் நாணயக்கார, சட்டத்தரணி ஏ.சி வெலியமுனவின் வீட்டின் மீது நடத்தப்பட்ட கைக்குண்டுவீச்சு சம்பவத்தைக் கண்டித்து அண்மையில் சட்டத்தரணிகள் மேற்கொண்ட அரசாங்கத்துக்கு எதிரான ஆர்ப்பாட்டத்திலும் பங்கேற்றமையும் அவர் ஜனாதிபதி ஆலோசகர் பதவியிலிருந்து நீக்கப்படவிருப்பதற்கான காரணம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாசுதேவ நாணயக்கார ஜனாதிபதியின் ஆலோசகராக இருந்து கொண்டு ஒவ்வொரு மூலையிலும் ஜனாதிபதியையும் அரசாங்கத்தையும் விமர்சிப்பதுஏற்றுக் கொள்ள முடியாதது என்பதே அரசாங்கத்தின் நிலைப்பாடாகவுள்ளது. (ச-5)

# வன்னி மக்களுக்கு வாராந்தம் 750 தொன் உணவுப் பொருள்கள்

வன்னியில் இடம்பெயர்ந்து வாழும் மக்களுக்கு வாரம் தோறும் 750 மெற்றிக் தொன் வரையிலான உணவுப் பொருட்களை அனுப்பி வைக்க திட்டமிட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மற்றும் மீள்குடியேற்ற அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை ஜெனீவாவில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான மாநாட்டில் கலந்து கொள்வதற்காக அமைச்சர் ரிசாட் பதியுதீன் ஜெனீவாவுக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

இடம்பெயர்ந்த மக்கள் எதிர்நோக்கும் அவலங்கள் குறித்து அமைச்சர் உரையாற்றவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. மக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களையும் அரச அதிபரினால் கோரப்படும் பொருட்களையுமே அனுப்பத் தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (எ-5)

# ஆண் குழந்தைக்குத் தந்தையானார் உலகின் மிகவும் உயரமான மனிதர்

உலகின் மிகவும் உயரமான மனிதராக கின்னஸ் உலக சாதனைப் புத்தகத்தில் இடம்பிடித்துள்ள சீனாவைச் சேர்ந்த பவோ ஸிஷஅன், ஆண் குழந்தையொன்றுக்கு தந்தையாகியுள்ளார்.

இதன் மூலம் உலகின் மிகவும் உயரமான தந்தை என்ற பெருமையை இவர் பெறுகிறார். இக்குழந்தை ஹபேயி மாகாணத்திலுள்ள ஸீன்ஹீவா மருத்துவமனையில் பிறந்துள்ளது.

இராட்சத உருவமுடைய தந்தைக்கும் சராசரி உயரமுடைய தாய்க்கும் பிறந்த மேற்படி ஆண் குழந்தையின் உயரம் 22 அங்குலமாக உள்ளதாக மேற்படி மருத்துவமனையின் சிரேஷ்ட மருத்துவர் ஸாங் தெரிவித்தார்.

உலகின் அதி உயரமான குழந்தை கடந்த வருடம் சீனாவில் பிறந்தது. அக்குழந்தையின் 29.5 அங்குல உயரத்துடன் ஒப்பிடுகையில், பவோவது குழந்தையின் உயரம் கணிசமான அளவு குறைவாகும்.

தனது குழந்தை சாதாரண உயரத்துடன் ஆரோக்கியமாக பிறந்துள்ளமை குறித்து பவோ (57 வயது) மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

எனக்கு பிறக்கும் குழந்தை சுமார் 2 மீற்றர் வரை உயரத்தைக் கொண்டிருக்கும் என நான் நினைக்கிறேன்.


அதனால் அக்குழந்தை வளர்ந்தபின் கூடைப் பந்து விளையாட சௌகரியமாக இருக்கும் என குழந்தை பிறப்பதற்கு முன்பு ஊடகவியலாளர்களுக்கு அளித்த பேட்டியில் பவோ தெரிவித்திருந்தார்.

அவரது குழந்தையின் நிறை 4.2 கிலோகிராம் என பதிவாகியுள்ளது.

இது சராசரி குழந்தைகளின் நிறையை விட அதிகமாகும். 7 அடி 9 அங்குலம் உயரமான பவோ, 5 அடி 6 அங்குலம் உயரமான ஸியா ஷஅஜீவானை கடந்த வருடம் திருமணம் செய்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

# தவிர்க்க முடியாத காரணங்களினால் இந்து ஆலயங்களினுள் சோதனை

## படைத்தரப்பு தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

தவிர்க்க முடியாத காரணங்களினால் இந்து ஆலயங்களை சோதனையிட வேண்டியுள்ளதாக யாழ்.பாதுகாப்பு படைத்தலைமையகம் தெரிவித்துள்ளது.

இது குறித்து அவர்கள் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு வருமாறு,

பயங்கரவாதத்தைத் துடைத்தெறியும் உறுதியுடன் செயற்பட்டுவரும் அரசாங்கமும் அதனை முற்றாக நடைமுறைப்படுத்தி பயங்கரவாதத்தை இல்லாதொழிக்கும் பொறுப்பை ஏற்றுள்ள முப்படையினரதும் பொறுப்புணவர்வை நாளுக்குநாள் உறுதிப்படுத்தி காட்டி கிழக்குப் பிரதேசம் முழுவதையும் மீட்டதன் பின்னர் கிளிநொச்சிக்குள்ளும் பிரவேசித்து அங்குள்ள பயங்கரவாத அரண்கள் தகர்த்தெறியப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

யாழ்.பிரதேசத்தில் நிலவும் அமைதிச் சூழலை சீர்குலைக்கும் நோக்கத்துடன் இந்துக்கள் புனிதத் தன்மையுடன் வணங்கி வழிபடும் சண்டிலிப்பாய் நாகபூசணி அம்மன் கோவில், கற்குழிவீதி அம்மன்கோவில் மற்றும் மாகியப்பிட்டி மீனாட்சியம்மன் கோவில் ஆகிய மூன்று கோவில்களிலும் தேர்களுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த பெருந்தொகையான ஆயுதங்கள் இராணுவத்தினரின் கடும் கண்காணிப்பின் பிரதிபலனாக கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்துக்கள் சமய அனுட்டானங்களை மேற்கொள்ளும் வருடத்துக்கு ஒருமுறை இறைவன் தம் அடியாருக்கு அருள் புரிய பவனிவரும் தேருக்குள் ஆயுதங்களை மறைத்துவைத்துக் கொண்டு இந்துக்களின் வணக்கத்தலங்களை மாசுபடுத்தி அவமதித்து வருகின்றனர்.

பாதுகாப்பு தரப்பினர் அனைத்துச் சமயங்களையும் மதித்து நடப்பதனால் இவ்வாறான இடங்கள் தேவையற்ற முறையில் சோதனையிடப்படுவதில்லை என்பதுடன் பயங்கரவாதிகளின் இவ்வாறான செயற்பாடுகளால் வணக்கத்தலங்கள் கடும் சோதனைக்கு உட்படுத்தவேண்டிய கடப்பாடு வரவேண்டியுள்ளது என்றுள்ளது. (எ)

## இலங்கை சிங்கள...

இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது,

இந்தியர்கள் தாம் எந்த இனம் என்பதை அடையாளப்படுத்துவதற்கு முன்பாக தம்மை இந்தியர்கள் என்றே அறிமுகப்படுத்துவார்கள். அம்மக்கள் நாட்டின் மீது அன்பு கொண்டுள்ளனர். எனவே முன்னேற்றத்தையும் அந்நாடு கண்டுள்ளது.

எனவே நாமும் சிங்களம், தமிழ், முஸ்லிம் என சிந்திப்பதை கைவிடுவோம். இலங்கையர்கள் என சிந்திக்கத் தொடங்குவோம்.

இலங்கையில் வாழும் அனைத்து இன மக்களுக்கும் இந்நாடு சொந்தமென அரசியலமைப்பிலேயே தெரிவிக்கப்பட்டுள்ளது. அனைத்து இன மக்களின் தனித்துவமும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மீதான மனிதாபிமான யுத்தத்திற்கு உலகில் எந்தவொரு நாடும் எதிர்க்கவில்லை, மாறாக ஆதரவு வழங்குகின்றன என்றார். (ச)

## தரைப்...

நிகழ்ச்சி முடிந்ததும் அனுராதபுரத்தில் உள்ள ஜெய ஸ்ரீ மகாபோதி அறக்கட்டளைக்கு இராணுவத்தின் சார்பில் 10 லட்சம் ரூபாய்களை நன்கொடையாக அவர் அளித்தார்.

அங்குள்ள தரைப்படையின் மருத்துவமனைக்குச் சென்று சிகிச்சை பெறும் இலங்கை இராணுவ வீரர்களைச் சந்தித்து உற்சாகம் ஊட்டினார். இம் மாதம் 10ஆம் திகதியை இராணுவ தினமாக இலங்கை கொண்டாடுகிறது.

அன்றைய தினத்தில் வெற்றி ஊர்வலத்தில் எடுத்துச் செல்வதற்காக கொடிக்கு ஆசி பெறப்படுவதாக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ச-5)

## கொழும்பிலுள்ள...

செய்து கொள்ளவில்லை என் பது சரிதான். ஆனால் சரியான புள்ளி விப ரங்கள் இன்னும் கிடைக்கப்பெறவில்லை என்றார்.

வடபகுதியில் இருந்து வந்து குடியேறியவர்களுக்காக நடந்த பதிவு நடவடிக்கையின் போது பதிவு செய்து கொண்டவர்களின் எண்ணிக்கையே அதிகமாகவுள்ளது.

கிழக்கில் இருந்து வந்து கொழும்பில் குடியேறியவர்களில் பலர் கிழக்கிற்கே திரும்பிச்சென்று விட்டார்கள். நிறையப்பேர் தத்தமது சொந்த இடங்களுக்கு திரும்பிவிட்டார்கள்.

கிழக்கிலிருந்து அண்மையில் இங்கே வந்திருந்தவர்கள் 326 குடும்பங்கள்தான். அவர்களில் பலரும் கூட கிழக்கிற்கே திரும்பச் செல்ல விரும்புகிறார்கள்.

சிலர் கொழும்பிலேயே தங்கியிருக்க விரும்புகிறார்கள். இன்று பதிவினை மேற்கொள்ளாதவர்களுக்காக இன்னுமொரு நாள் ஒதுக்கப்பட்டு பதிவுகள் மேற்கொள்ளப்படும் என அவர் மேலும் கூறினார். (ச-3)

## ஈழத்தமிழருக்கு உதவக்...

இலங்கை இனப்பிரச்சினையில் மத்திய அரசை தலையிடுமாறு வலியுறுத்தி இலட்சக்கணக்கான தந்திகளை பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு அனுப்புமாறு தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி பகிரங்க வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் தி.மு.க தலைவரும் முதலமைச்சருமான கருணாநிதி அறிக்கையொன்றை விடுத்துள்ளார்.

அந்த அறிக்கையில் இலங்கையில் இடைவிடாது நடக்கும் சிங்கள இராணுவத்தினரின் தாக்குதலில் இருந்து இலங்கை வாழ் தமிழினத்தவரை காத்திட அங்கு உடனடி போர் நிறுத்தம் அறிவிக்கப்படவேண்டும்.

இலங்கை தமிழர் பிரச்சினையில் சுமுகத் தீர்வு கண்டு அமைதிகாணவேண்டிய தீவிர முயற்சியில் இதுவரை நடந்துள்ள விரும்பத்தகாத நிகழ்வுகளை எல்லாம் இந்தியப் பேரரசு மனதில் கொண்டு தயக்கம் காட்டாமல் இந்த இனவெறி படுகொலை தொடர மேலும் மேலும் இடம் கொடுத்து விடாதளவுக்கு வழி காணவேண்டும்.

தேசிய முக்கியத்துவம் வாய்ந்த அபாய அறிவிப்பு போன்றதாக இந்த வேண்டுகோளை மத்திய அரசின் கவனத்திற்கு கொண்டு வருகின்றோம்.

இலங்கையில் தமிழர்கள் இனப்படுகொலை செய்யப்படுவதை உடனடியாக தடுத்து நிறுத்த பிரதமர் தலையிடவேண்டுமென்ற வாசகத்துடன் லட்சக்கணக்கில் பிரதமருக்கு தந்தியனுப்பவேண்டும். இவ்வாறு அந்த அறிக்கையில் கருணாநிதி கூறியுள்ளார்.

இவ்வேண்டுகோளையடுத்து நேற்று ஞாயிற்றுக்கிழமை விடுமுறையாக இருந்த போதிலும் தபாலகங்கள் திறக்கப்பட்டு தந்திகள் அனுப்பும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

லட்சக்கணக்கான மக்கள் வரிசையில் காத்திருந்து ஈழஉறவுகளைக் காக்குமாறு பிரதமருக்கு தந்தியை அனுப்பி வைத்தனர்.

இதேவேளை இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் இந்திய மத்திய அரசும் முதலமைச்சர் கருணாநிதியும் பாராமுகமாக இருப்பதாக தமிழக முன்னாள் முதல்வர் செல்வி ஜெயலலிதா கடும் கண்டனம் தெரிவித்திருந்தார்.

இந்நிலையிலேயே முதலமைச்சர் கருணாநிதி மேற்படி இலங்கை மக்கள் தொடர்பில் பகிரங்க வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளார்.

இதேவேளை சென்னையில் முதல்வர் கருணாநிதி தலைமையில் மாபெரும் கூட்டத்துக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இக்கூட்டத்தில் இலங்கைத் தமிழர் தொடர்பில் தி.மு.கவின் நிலைப்பாட்டை முதலமைச்சர் அறிவிக்கவுள்ளார்.

அத்துடன் மத்திய அரசு இலங்கை விடயத்தில் தலையிட்டு அமைதியை உருவாக்க வேண்டுமென்ற அழுத்தத்தைக் கொடுப்பார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ச-5)

## வன்னி யுத்...

இதன்போது இரண்டு தரப்புக்கும் பாரிய இழப்புக்கள் ஏற்பட்டுள்ளதாக இக்பால் அத்தாஸ் குறிப்பிட்டுள்ளார். இதேவேளை பூநகரிக்கு படையினர் பிரவேசிப்பதை தடுக்கும் முகமாக நாச்சிக்குடாவின் கிழக்குப் பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகள் பாரிய தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

'இந்த நிலையில் கொழும்பிலுள்ள புலனாய்வுத் தரப்பு அறிக்கைகளின்படி யாழ்ப்பாணம்,திருகோணமலை,மட்டக்களப்பு மற்றும் அம்பாறை ஆகிய இடங்களில் உள்ள போராளிகளை மீண்டும் தமது பிரதேசங்களிற்குச் செல்லுமாறு வன்னியிலுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமையகம் கட்டளை இட்டுள்ளதாக இக்பால் அத்தாஸ் குறிப்பிட்டுள்ளார். (ச)

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.10.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.